அறிவுக் களஞ்சியம்

3

நாம் இதனை அழைப்பது: சிறு தானியம், சோளம் என்று. ஆனால், உண்மையில் இது பெருந் தானியமாகும். இதற்கு ஓராயிரம் பேர் உலகெங்குமுள்ளது. மைலோ, கியோலியாங், சோர்கம், காப்பிர்கார்ன், ஜோவர் என. விரிவான செய்திகளுக்கு உள்ளே—

வரதர் வெளியீடு

ரூபா 10

வாசகர் கருத்து

✣ 'இரண்டாவது களஞ்சியத்தில், இருப்புக்கள் இனிக்கின்றன.
முரண்பாடு இல்லாததனால் முத்துக்கள் நிறைந்துள்ளன.
அரண் போல மாணவரை, அறிவுக்குள் இணையுங்கள்
மருண்டோட எழுத்துக்களை மக்களுக்குள் குவியுங்கள்!

— 'விடிவெள்ளிதாசன்', கோட்டக்கல்வி அலுவலகம், யாழ்.

✣ உங்கள் சஞ்சிகையின் முதற் பிரதியிலேயே நான் மிகவும் மகிழ்ந்து விட்டேன். ஆக்கபூர்வமான விடயங்கள்!

— க. குலேந்திரன், யாழ் இந்துக்கல்லூரி, யாழ்.

✣ அறிவுக்களஞ்சியத்தில் வந்த ஒவ்வொரு விடயமும் நிச்சயம் ஒவ்வொருவரினதும் பொது அறிவை மேன் மேலும் வளர்க்கும்!

— கி. செல்மர் எமில், ஊர்காவற்றுறை.

✣ ஒவ்வொரு ஆக்கமும் நிறைவான தாகவும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு ஏற்றவகையில் சிந்தனைக்கு உயிர்ப்பூட்டுவனவாகவும் உள்ளன.

— பா. பிரபாகரன் 327, நாவலர் வீதி, நல்லூர்.

✣ அறிவுக்களஞ்சியத்தில் மருத்துவ விடயங்களுக்கு முக்கியம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

— க. நாகேந்திரன், யாழ் மத்திய கல்லூரி, யாழ்.

✣ மாணவர் மட்டுமன்றி ஏனையோரும் படித்துப் பயன் பெறக்கூடிய விதத்தில் விடயங்கள் அமைந்துள்ளன. இன்றைய சூழ்நிலையில் இவ் வெளியீடு அவசியமானது.

— க. சிவசங்கரநாதன், இந்து இளைஞர் மன்றம், சரசாலை.

✣ தீர்க்கதரிசிகளை நம்பாத எனக்கு நொஸ்ரடாமசைப் படித்ததும் நம்பிக்கை வருகிறது. பேய் பிசாசுகளை நம்பாத எனக்கு பேய் பிசாசுகள் உள்ளனவா என்ற கட்டுரை என் கருத்துக்கு உறுதி தருகிறது.

— வ. விமலன், பத்திரகாளி கோயிலடி, சுழிபுரம்.

✣ அறிவுக்களஞ்சியம் கைக்கெட்டியது. படித்தேன் பலன் பெற்றேன். தனித்தமிழில் எழுதுக.

— சி. பொன்னம்பலம், நிமலகம், கரவெட்டி.

✣ அறிவுக்களஞ்சியத்தின் சுவையான செய்திகள் என்னை மகிழ வைத்தன.

— ஜெ. பிரதீபன், இந்துக்கல்லூரி, யாழ்.

✣ இத்தகைய ஒரு சஞ்சிகையை யாழ்ப்பாணத்திலுள்ள அறிஞர் குழாம் ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டிருக்கலாம். நல்ல ஆக்கபூர்வமான பணி.

— சி. சபாநாதன், சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

✣ 'படித்தவர்களாகிய நாங்கள் மற்றவர்களுடன் பங்கிட்டுக் கொள்ள வேண்டியதவசியம்' என்ற பேராசிரியர் அ.ச அவர்களின் வார்த்தையின் உள்ளர்த்தம் அறிஞர்களுக்குச் சமர்ப்பணம்.

ஆ. மயில்வாகனம், நல்லூர்.

(மேலட்டை 3ம் பக்கமும் பார்க்க)

அறிவுக்

களஞ்சியம்

3

பொது அறிவை
வளர்க்கும்
நோக்குடையது

ஆசிரியர்:
வரதர்

இணை ஆசிரியர்:
க. குணராசா M., A., S.L.A.S.
(செங்கை ஆழியான்)

துணை ஆசிரியர்:
கல்வயல், வே. குமாரசாமி

அலுவலகம்,
226,
காங்கேசன்துறைச்சாலை,
யாழ்ப்பாணம்.

அன்பான வாசகரே,
இந்த இதழ் குறித்த உங்கள் கருத்துக்களை எமக்குத் தவறாமல் எழுதி அனுப்புங்கள். உங்கள் கருத்துரைகள் அறிவுக்களஞ்சியத்தின் வளர்ச்சிக்கு மிக உதவியாகஇருக்கும்.

— ஆசிரியர்

காப்பாளர்கள்:

★ திருமதி. ச. அருள்நங்கை B. A. (Hons)
★ திரு. கா. வை. இரத்தினசிங்கம் (கொக்கூர்கிழார்)
★ திரு. ஆ. இராஜகோபால், B. A. [Hons] Dip. in Ed (செம்பியன் செல்வன்)
★ திரு. சு. குமாரசாமி, B. Sc., Dip. in Ed.
★ மூதறிஞர் க. சி. குலரத்தினம்
★ பேராசிரியர், அ. சண்முகதாஸ்
★ திரு. நா. கா. சண்முகநாதபிள்ளை B. Sc., Dip. in Ed., S.L.A.E.S

★ திரு. ஐ. சாந்தன்
★ பேராசிரியர், செ. சிவஞானசுந்தரம் (நந்தி)
★ திரு. சி. சிவசரவணபவன் M. A., Dip. in Ed (சிற்பி)
★ திரு. இ. ஜெயராஜ்
★ கலாநிதி, காரை. செ. சுந்தரம்பிள்ளை.
★ வித்துவான் க. சொக்கலிங்கம் M. A. (சொக்கன்)
★ திரு. நா. சோமகாந்தன் (ஈழத்துச்சோமு)
★ திரு. த, துரைசிங்கம் B. A, Dip. in Ed.
★ திரு. அநு. வை. நாகராசன்
★ திரு அ. பஞ்சலிங்கம் B. Sc., Dip. in Ed.
★ வண. பிரான்சிஸ் அடிகளார். M. A., Dip. in Ed
★ கவிஞர் சோ. பத்மநாதன், B. A., [Hons] Dip. in Ed.
★ திரு. ச. பாலசுந்தரம் B. A. (Hons)
★ மருத்துவ கலாநிதி, எம். கே. முருகானந்தன்.
★ கவிஞர் இ. முருகையன். M. A.
★ திரு. டொமினிக் ஜீவா
★ திரு கோ. சி. வேலாயுதம் B. Sc., Dip. in Ed.

திருக்குறள் முத்துக்கள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

வையத்துள் - இவ்வுலகிலே; வாழ்வாங்கு வாழ்பவன் - வாழ வேண்டிய அறநெறியின்படி வாழ்பவன்; வானுறையும் - வானிலுள்ள; தெய்வத்துள் வைக்கப்படும் தெய்வங்களுள் ஒன்றாக மதிக்கப் படுவான்.

குற்றங்களின்றி, மேலான குணநலன் உள்ள சக்திகளையே 'தெய்வங்கள்' என்று வணங்குகிறோம். இவ்வுலகில் அறநெறி தவறாமல் வாழ்பவனும் அந்தகைய ஒரு தெய்வமாகப் போற்றப்படுவான்,

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

'பஞ்சமா பாதங்கள்' என்று ஒரு வாக்கியம் தமிழில் நன்கு பழக்கப்பட்ட ஒன்று.

'ஐந்து பெரிய குற்றங்கள்' என்று அதற்குப் பொருள். கொலை, களவு பொய், காமம், குரு நிந்தை - என்ற ஐந்துமே அந்தப் பெரிய குற்றங்கள்.

இவற்றில் நடு நாயகமாக நிற்பது பொய்.

பொய் சொல்லத் துணிந்தவன், இந்தப் பக்கத்திலிருக்கும் இரண்டு பெரிய குற்றங்களையும், மறுபக்கத்திலிருக்கும் இரண்டு பெரிய குற்றங்களையும் கூசாமல் செய்ய வாய்ப்புண்டு.

பலர் பொய் சொல்வதைக் குற்ற உணர்வின்றியே சொல்கிறார்கள். 'உன்னாணை' என்று சத்தியம் கூடக் கருத்தை உணராமல் செய்வார்கள்.

எந்தக் குற்றத்தையும் முதலில் செய்யும் போது 'தவறு செய்கிறாய்!' என்று அறிவு எச்சரிக்கும். அதை மீறிக்கொண்டு அவன் அத்தகைய குற்றங்களை மீண்டும் மீண்டும் செய்யும் போது, அறிவு வாய் மூடிக்கொண்டிருந்து விடும்.

பொய் சொல்வதும் இப்படித்தான். 'பொய் சொல்கிறோமே' என்ற மனத் தாங்கல் சிறிதுமில்லாமலே பலர் பொய் சொல்கிறார்கள்.

'எந்தச் சமயத்திலும் ஒரு சிறு பொய் கூடச்சொல்ல மாட்டேன்' என்று உறுதி செய்து வாழ்வது சாதாரண மனிதனால் முடியக் கூடியதல்ல. ஆனால்,

மற்றவர்களுக்குத் தீங்கு செய்யக்கூடிய பொய்களைச் சொல்லாமல் வாழ்ந்தாலே போதும், அதுவே மேலான மனிதத்தனம்.

'பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்'

'புரை தீர்ந்த' என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். 'குற்றமற்ற' நன்மை செய்யுமானால், அந்தப் பொய்யையும்கூட உண்மையோடு சேர்த்துக் கொள்ளலாம் என்றுசொல்கிறவர் தமிழ் மறை தந்த வள்ளுவர்.

பொய் சொல்லப் பயந்து வாழ்ந்தால், பிற குற்றங்களையும் செய்யாமலிருக்க வாய்ப்புண்டு.

ஒலிம்பிக் விளையாட்டு

—ஹம்ஸ்

கிரிஸ் நாட்டிலுள்ள ஒலிம்பியா என்றவொரு சிறுநகரில், கி. மு. 776 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டியொன்று நிகழ்ந்தது. அதில் ஒரேயொரு போட்டியாக 200 யார் ஓட்டப்பந்தயம், ருப்கியா நதி மருங்கிலுள்ள சமவெளியில் நடைபெற்றது. அதிலிருந்து கிரேக்கர்கள் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை இப்புகழ் பெற்ற விளையாட்டுப் போட்டியை நடாத்தி வரத் தொடங்கினர். 'ஒலிம்பியாட்ஸ்' என அதனைப் பெயரிட்டழைத்தனர்.

நவீன ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி 1896 ஆம் ஆண்டு அதென்ஸ் நகரில் ஆரம்பமாகியது. சர்வதேச விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் ஓரிடத்தில் கூடி விளையாடுவதன் மூலம் நாடுகளிடையே நேசவுறவையும் பரிந்துணர்வையும் உருவாக்க முடியுமென ஒலிம்பிக் விளையாட்டிற்கு விளக்கம் தரப்பட்டது. அதென்ஸில் நிகழ்ந்த ஒலிம்பிக் போட்டியைத் தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை வெவ்வேறு நாடுகளில் ஒலிம்பிக் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது.

ஒலிம்பிக் போட்டிகளை சர்வதேச ஒலிம்பிக் குழு கண்காணித்து வருகின்றது. அத்தோடு ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தேசிய ஒலிம்பிக் குழுக்கள் விளையாட்டு வீரர்களைத் தயார் செய்து ஒழுங்குகளைக் கவனிக்கின்றது. சர்வதேச ஒலிம்பிக் குழுவில் 89 அங்கத்தவர்களுள்ளனர். அதன் தலைமையகம் சுவிற்சலாந்தில் லூசான்னேவிலுள்ளது. ஒலிம்பிக்கின் குறிக்கோள் யாதெனில், 'Citius Altius Fortius' என்பனவாம். அதாவது இன்னும் விரைவாக இன்னும் உயர்வாக இன்னும் சக்தியாக. ஒலிம்பிக்கின் சின்னம், ஐந்து நிற வளையங்களின் இணைப்பாகும். நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு என்ற ஐந்து நிற வளையங்களும் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் ஐந்து கண்டங்களைக் குறிக்கின்றது.

இந்த 1992 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் ஸ்பெயினின் பார்ஸிலோனா நகரத்தில் யூலை 25 ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 9 ஆம் திகதி வரை நடந்து முடிந்தேறியது. இதற்கென சிறப்புக் கட்டிடங்கள், அரங்குகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. 17 ஆயிரம் பேர் அமரக்கூடிய அரங்கு; 2 ஆயிரம் மாடி வீடுகள் 48 மாடிகளைக் கொண்ட இரு பெரும் இராச்சதக் கட்டிடங்கள். 257 வகையான போட்டிகளில் 269 நாடுகள் பங்கு கொண்டன, 549 தங்கப்பதக்கங்கள், 549 வெள்ளிப் பதக்கங்கள், 593 வெண்கலப் பதக்கங்கள், 4408 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவ்வாண்டு முதல் ஐந்து இடங்களைப் பெற்ற நாடுகள்:

இணைந்தகுழு(சோவியத்)	தங்கம்	45	வெள்ளி	38	வெண்கலம்	29
ஐக்கிய அமெரிக்கா	,,	37	,,	34	,,	37
ஜெர்மனி	,,	36	,,	20	,,	26
சீனா	,,	16	,,	22	,,	16
கியூபா	,,	14		10	,,	7

நிலவுக்கு ஒளிக்கலாம்!

தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறு அல்லது குற்றச் செயலால் தமக்கு அவப்பெயர் ஏற்படலாம், ஆபத்து நேரலாம், தண்டனை கிடைக்கலாம் எனப் பயப்படுபவர்கள், காலத்துக்குக் காலம் வாழ்க்கையிலே ஏற்படும் பிரச்சினைகள், சிக்கல்களை எதிர் கொள்ளத் தெரியாத மற்றவர்கள் தாம் வாழுமிடத்தை விட்டு விலகி வேறிடங்களுக்குச் சென்று வாழ முயல்வதுண்டு.

இப்படித் தப்பி ஓடுபவர்களைப் பார்த்து, "நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போகலாமா?" என ஏனையோர் கேட்பதுமுண்டு.

முன்னர் இழைத்த தவறு அல்லது குற்றம் சம்பந்தமான தகவல் புதிய இடத்திற்கும் விரைவிற் பரவி விடும்; எங்கிருந்தாலும் பிரச்சினைகள், சிக்கல்கள் தோன்றியே தீரும் இருக்குமிடத்திற் தொடர்ந்து இருந்து கொண்டே எதையும் எதிர் கொள்ள வேண்டும்; தப்பி ஓடுவதில் எவ்வித நன்மையும் இல்லை என்பதை வலியுறுத்தவே "நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போகலாமா?" எனக் கேட்கின்றார்கள்.

நிலவுக்கு ஒளிக்க முடியாது; அது எல்லா இடத்திலும் எப்போதும் இருக்கும்: அதன் பார்வை அல்லது தாக்கத்திலிருந்து யாருமே விடுபட முடியாது - என்ற ஒரு கருத்து இங்கே தொனிக்கிறது.

"காற்றைப் போல், எங்கும் என்றும் நிறைந்திருக்கும் சக்தி படைத்ததா நிலவு?" எனக் கேட்கின்றார் ஒரு தமிழன்பர்.

இரவு மட்டுமே நிலவுக்கு உரியது; பூரணையில் மட்டுந்தான் நிலவு இரவு முழுவதும் பூரண ஆட்சி செலுத்துகின்றது. நிலவு இல்லாத இரவுப் பகுதிகள் பல உள. சில நாடுகளிலே, தொடர்ந்து பல இரவுகளில் நிலவு தோன்றுவதே இல்லை. ஆகவே, நிலவுக்கு ஒளித்து வாழ முடியாது என்பது பொருத்தமாகத் தோன்றவில்லை.

அப்படியானால் இந்தப் பழமொழியின் சரியான வடிவம் என்ன?

தன் செல்வம், செல்வாக்கினால், தன் தவறுகளையும் குற்றங்களையும் ஒருவன் மூடி மறைக்கலாம்; எக்காலத்திலும் எவ்விதத்திலும் தான் தவறே செய்யவில்லை என்றும் சாதிக்கலாம்: சட்டத்தின் பிடியிலிருந்து தப்பலாம்: தன்னாற் பாதிக்கப்பட்டவர்களின் எதிர் நடவடிக்கைகளிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ளலாம்.

ஆனால், குற்றம் செய்த அவனுடைய நெஞ்சு குறுகுறுத்துக்கொண்டே இருக்கும்.

வாழிடத்தை - சூழலை மாற்றி வெகு தொலைவில் புதிய இடத்தில், புதியவர்கள் மத்தியில் ஒருவன் வாழ்ந்தாலும் "நினைவை" அவனால் அடக்க முடியாது; அழிக்க முடியாது: அது தொடர்ந்தும் அவனைத் துளைத்துத் துன்புறுத்திக் கொண்டே இருக்கும்.

நிலவுக்கு ஒளிக்கலாம்: ஆனால் நினைவுக்கு ஒளிக்க முடியாது; "ஆகவே, நினைவுக்கு ஒளித்துப் பரதேசம் போகலாமா?' என்பது தான் சரியான வடிவம்!" என்கின்றார் இத் தமிழன்பர்.

தமிழறிஞர்கள் - அநுபவம் மிக்கவர்கள் சிந்திப்பார்களாக. ○

பிரச்சினை யாருக்கு?

பிறருடைய பிரச்சினைகளை நாம் எமது தோளில் போட்டு அல்லற் படுதல் சகசம். சிறிது சிந்தித்துச் செயற்படுவோமாயின் இதனைத் தவிர்த்துக் கொள்ளலாம். அவசர புத்தி ஆபத்தில் மாட்டுமென்பார்கள்.

குடும்பத்தில் நடைபெறுமொரு சம்பவத்தைப் பாருங்கள்.

மகன்: (அம்மா மீது குற்றஞ்சாட்டி எரிந்து விழுகின்றான்) '' அம்மா, உங்களுக்குத் தெரியும், நீலமென்றாலே எனக்குப் பிடிப்பதில்லையென்று. தெரிந்தும், நீங்கள் எனக்கு இன்னுமொரு நீல சேட்டையே வாங்கி வந்திருக்கின்றீர்கள். நீங்களே போடுங்கோ.''

அம்மா: (பாதிக்கப்பட்டவளாக) '' நான் உன்னைப் பொறுத்தவரையில் எதனையுமே சரியாகச் செய்வதில்லை. என்னத்தைச் செய்தாலும் நன்மையில்லை.''

இப்பொழுது அம்மாவின் முதுகிற்தான் பிரச்சினை உள்ள மூடை. அவர் பேசாதிருந்திருக்கலாம், போதாக் குறைக்கு அப்பாவாலும் இவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அப்பா: (அம்மாவைக்காப்பாற்றி மகனைச் சாடுகின்றார்) ''மோகன் நீ அம்மாவுடன் என்ன துணிவில் இப்படிப் பேசுவாய்? அம்மா சமைத்த சாப்பாடும் உனக்கு வேண்டாம். போய்க்கிட!''

மகன்: (பாதிக்கப்பட்டவனாக மனம் வெந்தபடி கட்டிலில் முகங் குப்புறப் படுத்தபடி) 'என்னை எப்பொழுதும் உண்மை பேசும்படி சொல்கின்றீர்கள். உண்மையைச் சொன்னால எரிந்து விழுகின்றீர்கள். நான் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியுமா?''

இப்பொழுது மகனின் தலையில் வந்தது பிரச்சினை. அம்மாவால் மகன் வேதனைப் படுவதைப் பொறுக்க முடியவில்லை.

அம்மா: (மகனைக் காப்பாற்றும் நோக்குடன்) '' மோகன், அப்பா இருக்கட்டும் நீ வந்து சாப்பிடு, ஒரு சேட்டிற்காக நாங்கள் மண்டையை உடைப்பானேன்? '' (அப்பா மீது கணை வீசுகின்றாள்) '' நீங்கள் எப்பொழுதும் மோகனுடன் கடுமையாகத்தான் இருக்கின்றீர்கள், தொட்டதற்கும் கடிந்து விழுகின்றீர்கள். இப்பொழுது அவன் உங்களைத் திட்டிக் கொண்டுதான் இருப்பான்'

'இப்பொழுது பிரச்சினை எங்கே? அப்பாவின் முதுகில்!

அப்பா மனைவியை நோக்கி ''என்னப்பா, நான் மோகன் உம்மோடை பேசியதைப் பொறுக்கமுடியாமல்தான் தலையிட்டேன். இப்ப என்னடாவென்றால் நீரும் சேர்ந்து என்னிலே பிழை பிடிக்கின்றீர்''

மகன்: (அப்பாவைக் காப்பாற்றுவதற்காக) ''அம்மா சும்மா இருக்க மாட்டீங்களா? அப்பா களைத்துப் போய் இருக்கின்றார், அவருக்குத் தலையிடி கொடுக்கின்றீர்கள்!''

இப்படியே மாறிமாறிப் பிரச்சினையை முதுகில் போட்டுச் சுமை தாங்காது எத்தனை பேர் வேதனைப் படுகின்றார்கள்! இதிலிருந்து விடுதலை பெறச் சிந்தித்துக் கதையுங்கள், வேண்டிய போது மௌனம் சாதியுங்கள். O

OOO **அ. பஞ்சலிங்கம்,** பி. எஸ்ஸி. OOO

யப்பானிய மொழியும் வரி வடிவங்களும்

இன்று உலகிலேயே சிறந்த பொருள் வளம் படைத்த நாடாக 'யப்பான்' விளங்குகிறது. இந் நாட்டு மக்கள் பேசுகின்ற மொழி யப்பானிய மொழி என அழைக்கப் படுகிறது. இந்த மொழியைப் பற்றி யும், அதற்குரிய வரிவடிவங்களைப் பற்றியும் அறிவதில் இன்று பிற நாடுகள் பெரிதும் அக்கறை கொண் டுள்ளன.

யப்பானிய மொழி பேச்சு மொழியாக வளர்ந்து வந்து, ஏழாம் நூற்றாண்டிலே தான் எழுத்து மொழிக்குரிய வரிவடிவத் தைப் பெற்றது. பேச்சு மொழிக்கு ஏற்ற வரிவடிவமாக ஆரம்பத்தில் சீன மொழி வரிவடிவங்களே பயன் படுத்தப்பட்டன. இந்த வரி வடிவத்தைக் 'கன' (Kana) என அழைத்தனர். சீன மொழியின் வரிவடிவத்தை யப்பானிய மொழியின் ஒலி அமைப்பிற்கு ஏற்ற வகையில் உச்சரித்தனர். இதனால் வாசிப்பு முறையில் சீன மொழி வரி வடிவங்கள் ஒரே வடிவங்களாக இருந்த போதும் யப்பானிய மொழியில் வேறுபட்டுள்ளன. சீன வரிவடிவங்களை 'கஞ்சி' (Kanji) என அழைப்பர். ஆனால் 'கன' என்பது யப்பானிய மொழி யை எழுதுவதற்குப் பயன்படுத்தப் பட்ட சீன மொழியின் வரிவடிவத் தைக் குறிக்கும். யப்பானியர் சீன வரி வடிவங்கள் குறிக்கும் ஒலிக் குரிய பொருளை விடுத்து, தமது மொழிக்குரிய பொருளை அந்த வரிவடிவங்களுக்கு வழங்கிப் பயன் படுத்தினர்.

எனினும் எழுத்து முறையிலும் உச்சரிப்பு நிலையிலும் யப்பானிய மொழிக்கெனத் தனியாக ஒரு வரி வடிவத்தை எட்டாம் நூற்றாண் டின் இறுதியில் யப்பானியர் அமைத் தனர். இந்த வரி வடிவத்தை 'கிர கன' (Hiragana) என அழைத்த னர். 'கிரகன' என்றால் 'செய்யப் பட்ட வரிவடிவம்' எனப்பொருள் படும். 'கஞ்சி' (Kanji) என வழங் கப்பட்ட சீன வரிவடிவத்தின் சில பகுதிகளை மட்டுமே எடுத்து, இப் புதிய வரிவடிவத்தினை அமைத்த னர். அவற்றிற்கு யப்பானிய மொழியின் உச்சரிப்புக்களை வழங்கி யப்பானிய வரி வடி வங் களாகப் பயன் படுத்தினர்.

அடுத்து இக் 'கிரகன' (Hira- gana) வடிவங்களின் வளைவு களைச் சற்று மாற்றி 'கதகன' (Katakana) என ஒரு புதிய வரி வடிவத்தையும் அமைத்தனர். இந்த வரிவடிவம் யப்பானிய மொழியிலே பிற மொழிச் சொற் களை எழுதுவதற்குப் பயன் படுத் தப்படுகிறது. ஒலியமைப்பிலும் உச்சரிப்பிலும் 'கிரகன' (Hira- gana) 'கதகன' (Katakana) வரி வடி வங்களுக்கிடையே வேறுபாடு கிடையாது. யப்பானியப் பெண் களே இவ் வரிவடிவங்களை கல்வி நிலையில் பெரும் பாலும் பயன் படுத்தி வந்தனர். அதனால் இவ் வரி வடிவங்களைப் பெண்களுக் கென ஆக்கப்பட்ட வரி வடிவங்கள் எனவும் கொள்கின்றனர்.

தற்காலத்தில் யப்பானிய மொழியைக் கற்கும் பிறமொழியா ளர்கள் சொற்களையும், ஒலிகளை

மனோன்மணி சண்முகதாஸ், எம். ஏ.

கக்சுயின் பல்கலைக் கழகம், தோக்கியோ.

யும் உச்சரிப்புக்களையும் நினைவில் வைத்திருப்பதற்காக ஆங்கில மொழி வரி வடிங்களைப் பயன் படுத்துகின்றனர். யப்பானியர் அதனை ‘ றோமஜி ’ (Romaji) என அழைப்பர். ‘ கஞ்சி ’ (Kanji) என அழைக்கப்பட்ட சீன வரி வடிவங்கள் போல ‘ றோமஜி ’ (Romaji) என அழைக்கப்படும் வரி வடிவங்களும் யப்பானிய மொழிக்குப் பிற மொழிகளிலிருந்து கிடைத்த வரிவடிவங்களாகும்.

இதனால் இன்று யப்பானிய மொழியைப் படிக்க விரும்புவோர் நான்கு வகையான வரி வடிவங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அதிலும் ‘கிரகன’ (Hiragana) ‘ கதகன’ (Katakana) றோமஜி (Romaji) என்னும் மூன்று வரி வடி வங்களும் தத்தமக்குரிய ஒரே உச்சரிப்பை மட்டும் கொண்டுள்ளன. ஆனால் ‘ கஞ்சி ’ (Kanji) என படும் சீன வரி வடிவங்கள் உச்சரிப்பு நிலையில் சீன மொழிக்குரிய உச்சரிப்புக்களையும் யப்பானிய மொழிக்குரிய உச்சரிப்புக்களையும் கொண்டுள்ளமையால் அவற்றை நினைவில் நிறுத்துவது சற்றுக்கடினமான காரியமே. எனினும் யப்பானியருக்குரிய வரிவடிவங்கள் ஒலி ஒழுங்கு நிலையிலும் உச்சரிப்பு நிலையிலும் தமிழ் மொழியின் வரி வடிவங்களைப் பெரிதும் ஒத்திருப்பதனால் தமிழர் யப்பானிய மொழியைக் கற்பது மிகவும் எளிதாக உள்ளது. ○

குறுக்கெழுத்துப் போட்டி 1 முடிவுகள்

குறுக்கெழுத்துப் போட்டியில் 392 பேர் பங்கு பற்றினார்கள் அவர்களில் 154 பேர் சரியான விடைகளை எழுதியிருக்கிறார்கள். அதிக எண்ணிக்கையில் சரியான விடைகள் வந்த படியால், அதிட்டம் பார்க்கும் முறையில், அவற்றிலிருந்து இரண்டு விடைகள் மட்டும் தெரிவு செய்யப்பட்டன. ரூபா 50/- வீதம் பரிசைப் பகிர்ந்து கொள்ளும் அதிட்டசாலிகள் 1) சிவலிங்கம் கிருஷ்ணமாலா, வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ். 2) த. பிரபாகரன், விக்கினேஸ்வர வித்தியாலயம், தொல்புரம். பரிசு பெற்றவர்களுக்கு விரைவில் பரிசுத் தொகை அனுப்பி வைக்கப்படும். சரியான விடை எழுதியவர்களின் பெயர்களை வெளியிட முடியாமைக்காக வருந்துகிறோம். அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

— ஆசிரியர்

(ஏனைய போட்டி முடிவுகள் 39 ம் பக்கம்)

● அவுஸ்திரேலிய ஆதிக்குடிகள் வேட்டையாட உபயோகிக்கும் ஒரு வளை தடிக்குப் பெயர் ‘பூமாரங்’. இதனை ஓர் இலக்கை நோக்கி வீசியெறிந்தால் அது இலக்கைத் தாக்கிவிட்டு எறிந்தவர் பக்கமே திரும்பி வரும். பக்குவமாகப் பிடிக்காவிடில் எறிந்தவனையே தாக்கும்.

அறிஞர் அரிஸ்டோட்டில்

கொக்கூர் இழார்

சிந்தனையாளன் பிளேட்டோவின் சிறந்த மாணவனான அரிஸ்டோட்டில் மசிடோனியாவில் ஸ்ரஜிரா எனுமிடத்தில் கி. மு. 385 இல் பிறந்தான். தந்தை நிக்கோமாக்கஸ் சிறந்த மருத்துவன். மகா அலக்ஸாண்டரின் பாட்டனாரின் அரண்மனை மருத்துவனாக இருந்தான். இதனால் மசிடோனிய அரச தொடர்பு அரிஸ்டோட்டிலுக்கு ஏற்பட்டது. அதன் செல்வாக்கும் அயோனிய விஞ்ஞானமும், மிலேசிய தத்துவ ஞானமும் அவன் வாழ்வில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தின.

பிளேட்டோவின் சிந்தனைகளாலும் சீரிய நடைமுறைகளாலும் கவரப் பெற்ற இவன் அங்குப் பல்துறையறிவுகளையும் பெற்றுச் சிறந்த மாணவனெனப் பிளேட்டோவினால் பாராட்டப் பெற்றான். கி.மு 347 இல் பிளேட்டோ சாகும் வரை, அங்கு அக்கடமியில் அவன் மாணவனாயிருந்த அரிஸ்டோட்டில் அவன் இறந்ததும் அங்கிருந்து வெளியேறி அட்டானியஸ் அடைந்தான். அங்கே நண்பன் ஹேமியாசுடன் சிலகாலம் வாழ்ந்தான். அப்பொழுது அவனுடைய உறவினளை மணந்து மகன் ஒருவனுக்குத் தந்தையானான்.

மசிடோனிய மன்னன் தன் மகன் அலக்சாண்டருக்கு இவனை ஆசிரியனாக்க விரும்பி அழைப்பு விடுத்தான். அதனையேற்று அரிஸ்டோட்டில் அங்குச் சென்றான். அப்பொழுது அவனுக்கு 43 வயது. அலக்சாண்டருக்கு 13 வயது. அங்குக் கழகம் நிறுவிப் பல்துறை அறிவையும் கற்பித்தான். பிளேட்டோவின் சிந்தனைகள் பற்றிய ஆய்விலும் ஈடுபட்டான்.

ஆசியா மீது அலக்சாண்டர் படையெடுத்துச் சென்றதும் அரிஸ்டோட்டில் மீண்டும் அதென்ஸ் சென்றான். அப்பொழுது அவனுக்கு 50 வயது.

தனது 53 வது வயதில் 'லைசியம்' எனும் கழகத்தை அங்கு நிறுவினான். அங்கு பயின்றவர் அனைவருடனும் தோழமையுடன் பழகி அறிவுத்துறைகளனைத்தையும் புகட்டினான். நீண்டு கிடந்த நெடுவழியில் நடந்தவாறே கற்பித்தான். இங்கு பயின்றவர் 'பெரிபரெட்டிக் தத்துவ ஞானிகள்' எனப் பெற்றனர்.

உயிரியல், இயற்கை விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு முதலிடம் கொடுத்த அரிஸ்டோட்டில் அரசியல், பொருளியல், வானியல், தர்க்கவியல், ஒழுக்கவியல், உளவியல் போன்றவற்றுக்கும் அங்கு இடமளித்தான்.

இவனுடைய சிந்தனைகள் பல்வேறுபட்ட சிந்தனையாளர்களையும் கவர்ந்தன. இவன் எழுதிய நூல்கள் பலவும் பின்னாளில் எழுந்த பல்துறை நூல்களுக்கும் முதனூல்களாயமைந்தன. கலையழகும் கருத்தழகும் மிக்க பன்னூற்றுக் கணக்கான நூல்களை எமக்கு விட்டுச் சென்ற அறிஞன் அரிஸ்டோட்டில் அதன்சினின்றும் நீங்கி, சல்சியில் புகலிடம் தேடிச் சின்னாள் கழிய கி. மு. 322 இல் இன்னுயிர் நீத்தான். ❋

தமிழ் எண் வரிசையிலே முரண்பாடுகள்

"சொக்கன்"

தமிழிலே ஒன்று தொடக்கம் எட்டு வரையுள்ள எண்களிலே ஓர் ஒழுங்கு முறை காணப்படுகின்றது. ஆனால் ஒன்பது, பத்தின் கூறான 'பது' என்பதோடு முன்னொட்டாக 'ஒன்' என்பதைக் கொண்டமைந் திருப்பது பொருத்தமற்ற ஓர் முரண்பாடாகும். இந்த முரண்பாட்டினால் நூற்றினைப் பின்னொட்டாக்கிய தொண்ணூறு (90), ஆயிரத்தைப் பின்னொட்டாக்கிய தொள்ளாயிரம், (900) என்ற சொல்வடிவங்களும் வழக்கிலே இடம் பெறலாயின.

ஒன்பது என்ற சொல்லுக்குப் பதிலாக முன்பு 'தொண்டு' என்பதே வழக்கில் இருந்தது.

தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவின்
(மலைபடுகடாம்- 21)

'வளையலுடைய உறழ்ச்சியைப் போன்ற, ஒன்பது என்னும் எண்ணைக் கொண்ட வார்க்கட்டின்' என்ற பொருள் கொண்ட மேற்படி பாடல் அடியிலே 'தொண்டு' என்பது ஒன்பது என்னும் பொருளில் வருகின்றது.

தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்று
ஒன்பஃது என்ப உணர்ந்திசி. னோரே.
(தொல்காப்பியம். சொல்லதிகாரம். செய்யுளியல் -101)

'தொண்டு தலையிட்ட' என்ற சொற்றொடருக்கு, "ஒன்பானை (ஒன்பது) யகப்படும் மொழியாகவுடைய" என்று பேராசிரியர் (உரையெழுதியவர்) கருத்து எழுதியுள்ளார். அடுத்து வரும் அடியிலே 'ஒன்பஃது' என்ற சொல்லும் வருவதை நோக்கும் பொழுது, தொல்காப்பியர் காலத்தில் தொண்டு, ஒன்பது என்ற இரண்டு சொற்களும் ஒரே பொருளில் வழங்கி வந்தன என்று கொள்ளலாம்.

ஆகவே,
தொண்டு = 9
தொண்(டு) + பத்து(எட்டு + பத்து = எண்பது) தொண்பது =90
தொண்(டு) + நூறு (எட்டு+நூறு=எண்ணூறு) ,தொண்ணூறு = 9(0
தொண்டு + ஆயிரம் (— —)தொள்ளாயிரம்= 9000.

என்று அமைவதே பொருத்தம், ஆனால் வழக்கின் வலிமை இந்தப் பொருத்தப் பாட்டினைப் புறந்தள்ளி விடவே தொண்ணூறு, (90) தொள்ளாயிரம் (தொளாயிரம் என்றும் வழங்கும்), (900) என்ற சொற்றொடர்களுக்குத் தொல்காப்பியா, பவணந்தியார் (நன்னூல் ஆசிரியர், முதலியோர் மிக வலிந்து புணர்ச்சி விதி கூற வேண்டியதாயிற்று.

(24 ஆம் பக்கமும் பார்க்க)

அட்டைப் படக் கட்டுரை

பெருந்தானியம் சோளம்

சிறு தானியப் பயிர்களில் ஒன்று சோளமாகும். ஆனால், அது தானியங்களில் பெரிதாக இருப்பதனால் 'பெருந்தானியம்' (Great Millet) என்கிறார்கள். சோளத்திற்கு சோர்கம் வல்கேர் (Sorghum Vulgare) என்பது தாவரவியற் பெயராகும். நாட்டிற்கு நாடு இதற்கு வெவ்வேறு பெயர்கள்: அமெரிக்கா — மைலோ, சீனா — கியோலியாங், ஐரோப்பா — சோர்கம், ஆபிரிக்கா — காப்பீர்கார்ன், இந்தியா — ஜோவர்.

சோளத்தின் தாயகம் ஆபிரிக்க சூடான் எனக் கருதப்படுகின்றது. இந்தியாவே சோளத்தின் தாயகம் என்ற கருத்துமுள்ளது. ஆபிரிக்கா, இந்தியா, சீனா, ஐக்கிய அமெரிக்கா முதலான நாடுகளில் சோளம் அதிகளவில் பயிராகின்றது. இது ஓரளவு வறட்சியைத் தாங்கக்கூடிய பயிர். சராசரி 26° செ. வெப்ப நிலையும் 50 செ.மீ. — 75 செ.மீ மழைவீழ்ச்சியும் கிடைக்கும் பிரதேசங்களில் பயிராகும். பல்வேறு சோள வகைகள் இன்றுள்ளன.

ஆபிரிக்க நாட்டு மக்கள், இந்திய மக்கள் என்போர் சோளத்தைத் தமது தானிய உணவாகக் கொள்வர். வறிய மக்களின் தானியமாக இது விளங்குகிறது. சோளத்தை நனைத்து உரலிலிட்டுக் குத்தி உடைத்து அன்னமாகச் சமைத்து உண்பர். மாவாக்கிக் களியாகவும் கூழாகவும் உண்பர். பொரியாக நாம் சோளத்தைச் சாப்பிடுவோம். அரிசியைக் காட்டிலும் புரதச் சத்தும் கனியச்சத்தும் சோளத்தில் அதிகமாகும். உலகநாடுகள் பலவும் சோளத்தைக் கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்துகின்றன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் சோள வலயம் என்ற ஒரு பரந்த பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டு வரும் சோளம் முற்றியதும் பட்டிபட்டியாக அடைத்து பன்றிகள், மாடுகள் என்பனவற்றை நேரடியாக மேய விடப்படுகின்றது. அவை சோளத்தைத் தின்று கொழுத்ததும் இறைச்சியாக்கப்படுகின்றன. மிருக உணவாகக் கொடுத்து இறைச்சியாக ஏற்றுமதி செய்வது இலாபகரமானது. சோளம் ஈரப்பிடிப்பான தானியம். அதனால் நீண்ட காலம் பழுதடையாது பேணுவது கடினம். ஆர்ஜென்டீனாவில் சோளம் உடலுக்குடன் ஏற்றுமதியாகிறது.

நன்கு வளராத சோளப்பயிரில் ஹைட்ரோ சயனிக் அமிலம் என்ற நஞ்சுள்ளது. அது கால்நடைகளைப் பாதிக்கும். நன்கு முற்றிய செடியில் ஹைட்ரோ சயனிக் அமிலமிருப்பதில்லை.

உங்கள் சந்தேகம்?

● இறைவன் என்று ஒரு பொருள் இருக்கின்றதா! இல்லையா?
— ச. கருணாகரன், சாவகச்சேரி வடக்கு.

கருத்து : 1

இறைவன் என்ற பொருள் இருக்கின்றதா? இல்லையா? என்கின்ற இந்த ஆராய்வு இன்று நேற்றல்ல பழைமையான காலத்திலிருந்தே நடந்து வருகின்றது. அவர்கள் ஆராய்வின் முடிவில் இறைவன் என்ற பொருள் உண்டு என்றே முடிவுகள் அமைந்தன. அதை உறுதிப்படுத்தும் நோக்கில் அவர்கள் தந்த விளக்கம் இதுவாகும்: " ஜடப்பொருட்கள் என்றைக்கும் தானாக இயங்குவதில்லை. இயங்கமாட்டாத இந்த ஜடப் பொருளை இயக்குவதற்கு ஒரு இயக்கி அவசியமாகின்றது. இதே போன்று உலகமாகிய ஜடப்பொருளும் இயங்குகின்றது. உலகமாகிய ஜடப்பொருளின் இயக்க சக்தி எதுவோ அந்த சக்தியே கடவுள்" என்பதே அந்த ஆன்மீக ஞானிகள் கருத்தாகும்.

தத்துவ ஞானியாகிய மெய்கண்டார் வழங்கிய சிவஞானபோதத்தில் இறைவன் உள்பொருள் என்பதனை பின் வருமாறு விளங்க வைக்கின்றார்.

" அவன் என்றும் அவள் என்றும் அது வென்றும் பலவாகச் சுட்டி உணர்த்தப்படும் இப்பிரபஞ்ச மானது தோற்றம், நிலை பேறு ஒடுக்கம் எனப்படும் தொழிற்பாடுகளை கொண்டுள்ளது. இத் தொழிற் பாடுகளுக்குரிய காரணி எதுவோ அதுவே அந்தமும் ஆதியுமற்ற இறைவன் என்பதாகும்.

எனவே, சிந்தனை அறிவாளர்களாகிய தத்துவ வாதிகள் மட்டுமன்றிச்சமய ஞானிகளும் இறைவன் உளன் என்ற கருத்தை உறுதிப் படுத்து வதனால் இறைவன் என்ற பொருள் உண்டு என்ற முடிவிற்கே வர முடிகின்றது.

— திருமதி. ச. அருள்நங்கை.

கருத்து: 2

பேய், பிசாசு, பூதம், ஆவிகள், சொர்க்கம் நரகம், மறுவுலகம், இறைவன் போன்றன யாவும் மனித மனத்தில் தோன்றிய கற்பனைப் படைப்புக்களே. அறியாமையில் உழன்ற அடி நாளில் அகவிருளும் புற விருளும் விளைந்த அச்சத்தால், தன் தேவைகளை யொட்டி மனிதன் இவை யெல்லா வற்றையும் படைத்தான்

காலப் போக்கில் அறிவியல் வளர்ச்சியும், தொழில் நுட்பப் புரட்சியும் சமுதாய வளர்ச்சிக்கு வழி கோலிய போது மனிதனுடைய பழைய தேவைகளும், மறையவே, பழையன கழியப் புதியன புகுந்தன. இஃது இயல்பே.

கருத்துக்கள் யாவும் சூழலிலிருந்தே பிறக்கின்றன. இவை சூழலுக்கேற்பவும், தனிமனித சிந்தனை வளர்ச்சியைப் பொறுத்தும், தேவைகளை யொட்டியும் மனிதனால் படைக்கப்பெறுபவையே. காலத்துக்குக் காலம், இடத்துக்கிடம் சூழல் மாறுபடுவதனால் இக் கருத்துக்களும் மாறுபட்டும் வேறுபட்டும் காணப்படுகின்றன.

— கொக்கூர் கிழார்.

ஆசிரியர் குறிப்பு:

நான் பல அறிஞர்களுடன் ' இறைவன்' பற்றி உரையாடிய துண்டு.

சிலர் தாம் கொண்ட மதக் கடவுள் மட்டுமே உண்மைப் பொருளென்றும், மற்றைய யாவும் பொய்யானவை என்றும் நம்புகிறார்கள். வேறு பலரோ, இந்த உலகத்தையும் உயிர்களையும் படைத்த ஒரு பெரும் சக்தி உண்டு. அதுவே 'இறைவன்' என்கிறார்கள்.

வேறு சில அறிஞர்கள், ' இறைவன் யாராலும் உண்டாக்கப்படவில்லை. அவனுக்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை, என்று மதவாதிகள் கூறுவதுபோல, அந்த 'ஆதியும் அந்தமும் இல்லாத பொருள் இந்த உலகமும் உயிர்களுமே. இவற்றையாரும் படைக்கவில்லை, தனது தேவைகருதி மனிதனே 'இறைவன்' என்ற கற்பனைப் பொருளையும் உண்டாக்கினான்' என்கிறார்கள்.

இந்த விவாதத்துக்கு முடிவு காண்பது இயலாது. 'உண்டு' என்பார்க்கு உண்டு; 'இல்லை' என்பார்க்கு இல்லை.

'உண்மை'யை நூல்களில் தேட வேண்டாம். குருவிடம் போகவேண்டாம், ' உண்மை' வெளியிலிருந்து வராது. அது உங்கள் உள்ளத்திலிருந்து தான் தோன்ற வேண்டும்' என்று கூறும் அறிஞர் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் கருத்துக்கள் சிந்திக்கத் தக்கவை.

இறைவனும் மதங்களும் ஒரு புறமிருக்க, திருக்குறள் கூறிய அறவழிகளைக் கைக்கொண்டு நாம் வாழ்வோமானால் இறைவனும் எமக்குள் அடங்கும்.

இந்தச் சந்தேகத்துக்கு முடிவு காண்பதென்பது பெரும்பாலும் இயலாதாகையால் இது பற்றிய கருத்துரைகள் இனி அறிவுக் களஞ்சியத்தில் தொடராது.

* * *

● ஆர்தர் . சி. கிளார்க் அமெரிக்கரல்லர்: ஆங்கிலேயர்.

— ந. இளஞ்செழியன், நல்லூர்.

● ஆர்தர் சி. கிளார்க் ஒரு கட்டுக்கதை எழுத்தாளர் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். முதல் சர்வதேசத் தொலைத் தொடர்புச் செய்மதியை வடிவமைத்தவர். விஞ்ஞானி. பல்கலைக் கழக முதல்வர். வானியலாளர்.........

— த. நித்தியானந்தன், கொக்குவில் மேற்கு.

ஆர்தர் சி. கிளார்க் சோமசெற்றில் 1917 இல் பிறந்த ஆங்கிலேயர். அமெரிக்காவில் வாழ்ந்து விட்டு, இன்று கடந்த 31 வருடங்களாக கொழும்பில் வாழ்கின்ற இலங்கையர். பல்தேர்வு வினாக்களில் மிகச் சிறந்ததே சரியான விடையாகும். அதனால் அவர் விஞ்ஞானக் கட்டுக்கதை அல்லது புனைகதை எழுத்தாளர் என்பதே சரி. விபரமான குறிப்பை அடுத்த இதழில் பாருங்கள்.

— ஆசிரியர்.

புதுக் குறள்

(மரபுக் கவிதை)

மு. விஜயராகவன்

★ நிற்கார் நிவாரண நீள்வரிசை யில் ஓடி
நம்பிக்கை மிக்குடை யார்

★ துப்பாக்கி தூக்கத் துணிவிலார் எப்படியும்
தப்பிவெளி நாடுபறப் பார்

★ பதுக்குவர் ஓடிப் பதுங்குவர் சொத்து
பிதுங்க விழி வீணாகப் போம்

★ நஞ்சுண்டு சாதலும் வீரமன் றென்று தம்
பிஞ்சுடல் சிதறிச்சா வர்

★ குண்டுகளைப் போட்டுக் குடியாளும் அவ்அரசு
மாண்டு கெடும் என்ப தறி.

இந்த மண்

(புதுக் கவிதை)

தாமரைப் பூவினில்
தேரினை ஓட்டும்
தமிழனின் யுத்தம்
சாமரைகள் ஏற்காது

சந்திர சூரியன்களின்
சில்லுகள் உடைந்தாலும்
இந்த மண்
என்றும் அடி பணியாது

பூட்டனும் பூட்டியும்
பூரித்த இந்நிலம்
பூட்டுகள் உடைக்கும்
புலிகளை நிறைக்கும்

◎

பு. திலீப்காந்த்

மின்னோட்டக் கொள்கையின் முன்னோடி

○ ○ பெஞ்சமின் பிராங்கிளின் ○ ○ ○

—வண்ணை சே. சிவராஜா பி. எஸ்சி

வானத்தில், முக்கியமாக மழை காலங்களில், மின்னலும், அதனைத் தொடர்ந்து இடியும் உண்டாகும் போது, அது எவ்வாறு உண்டாகின்ற தென்பதைப் பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்ததுண்டா? இது மின் தாக்கத்தால் தான் உண்டாகின்றதென்பதை எடுத்துக் கூறியவர் பெஞ்சமின் பிராங்கிலின் என்ற அமெரிக்க விஞ்ஞானியாவார்.

பெஞ்சமின் பிராங்கிலின் 1906 ம் ஆண்டு ஜனவரி 17 ம் திகதி அமெரிக்காவிலுள்ள மசெசு செட்ஸ் மாநிலத்தின் பொஸ்டன் நகரில் பிறந்தார். இவரது பெற்றோருக்குப் பிறந்த பதினாறு பிள்ளைகளில் ஒருவராகப் பிறந்த பிராங்கிலின், வறுமையின் காரணமாக தனது பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்த வேண்டி ஏற்பட்டது. தனது தந்தையின் மெழுகுவர்த்தித் தொழிலுக்கு உதவியாளராக இருந்து வறுமையைப் போக்க வேண்டியிருந்தது. இள வயதில் தமையனின் அச்சகத்தில் உதவியாளராகவும் பணியாற்றி பொருள் தேட வேண்டியிருந்தது.

பணம் கிடைக்காத போதும் இவருக்கிருந்த அறிவுப் பசியினால், உணவைக் கூடத்தியாகம் செய்து கணிதம், இலக்கணம், வரலாறு போன்ற நூல்களை வாங்கிக் கற்பதன் மூலம் தனது அறிவைப் பெருக்கிக் கொண்டார். இதனால் இவர் சிறந்த எழுத்தாளராகவும் பதிப்பாளராகவும் மாறினார். இவரது பொருளாதார நிலை முன்னேற்றமடைய, இவர் தனது புலனை விஞ்ஞான ஆய்வுகளில் செலுத்த ஆரம்பித்தார்.

மின்னியக்கத்தின் அடிப்படைக் கொள்கையான மின்னியலின் தன்மைகளை எடுத்துக் கூறியவரும் இவரே. உலகில் உள்ள சடப் பொருட்கள் யாவும், பொதுவான பொருட்களையும் மின்னியக்கப் பொருட்களையும் கொண்டிருப்பன வென்றும், இவையே புறோத்தன், இலத்திரன், என்றும் கூறினார். சாதாரணமாக புறோத்தன் என்ற நேர் மின்னும், இலத்திரன் என்ற எதிர் (மறை) மின்னும், நியூட்ரோன் என்ற மின்னேற்றமற்ற துணிக்கையும் ஒரு சடப்பொருளின் அணுவில் காணப்படுபவையாகும். நிலையாகவுள்ள புறோத்தனிலும் பார்க்க இலத்திரனின் துணிக்கைகள் அதிகமாகக் காணப்படின், இலத்திரனானது, புறோத்தனை நோக்கிப் பாயும், இந்தப் பாய்ச்சலின் போது மின் ஓட்டம் உண்டாகின்றது.

மேற்கண்ட பாய்ச்சலைப் போன்றே வானில் காணப்படும் முகில் கூட்டங்களிடையே, இலத்திரனானது. புறோத்தனை நோக்கிப் பாயும் போது ஏற்படும் ஒளியும், ஒலியுமே, மின்னலும் இடியுமாக எமக்குத் தெரிகின்றன, மேலும் இவையிரண்டும் ஒரே நேரத்தில் நடைபெற்றாலும், ஒலியின் வேகமானது ஒளியின் வேகத்தை விடக் குறைவானது என்ற காரணத்தினால், ஒலியானது தாமதித்தே எம்மை வந்தடைகின்றது. இலத்திரன், புறோத்தன், என்பனவற்றின் எண்ணிக்கை சமநிலையிருக்கும் போது, பொருளானது (அணு) ஏற்ற மற்றிருக்கும், என்பது பிராங்கிளின் தந்த கொள்கையாகும்.

கண்ணாடித் தண்டொன்று, பட்டினால் உரோஞ்சப்படும் போது இலத்திரன், கண்ணாடிக்கும் புறோத்தன் பட்டிக்கும் சென்று அதனை மின்னேற்றுகின்றது. என்பதையும் பிராங்கிலின் நிலை நாட்டினார். இவ்வாறு மின்னேற்றப் பட்ட கண்ணாடித் தண்டினால் சிறு சிறு கடதாசித் துண்டுகளைக் கவர முடியும்.

வானத்தை நோக்கி ஒரு துண்டை வைப்பதன் மூலம், இடி ஏற்படும் போது, உண்டாகும் இலத்திரன் பாய்ச்சலை அதனூடு பெற்று, ஒரு உலோகக் கம்பியின் மூலம் பூமிக்குக் கொண்டு வர முடியுமெனவும், இதனால் கட்டிடங்கள் இடியினால் தாக்க முறுவதைத் தவிர்க்க முடியுமெனவும் கூறினார். இந்தத் தத்துவத்தைக் கொண்டே இன்றைய இடிதாங்கிகள் பெரும் கட்டிடங்களில் அமைக்கப்படுகின்றன.

பொருளொன்றில் காணப்படும் திரவமொன்றின் ஏற்றதாழ்வுகளுக்கு ஏற்பவே மின்னேற்றம் ஏற்படுவதாகவும் அவர் நம்பினார். அதாவது ஒவ்வொரு பொருளிலும் '' மின் திரவம் '' காணப்படுவதாகவும், அது நிலைக்கேற்ப திரவத்தைப் பெறுவதாகவோ அல்லது இழப்பதாகவோ இருக்குமென்றும் இழக்கும் போது நேர் ஏற்றத்தையும், ஏற்கும் போது மறை ஏற்றத்தையும் அப்பொருள் பெறுவதாகவும் அவர் கூறினார். இவரது இந்தக் கொள்கையே இன்று மின்னோட்டத்தை இலத்திரன்களின் ஓட்டம் என விளக்கி நிற்கின்றது.

மின்னியக்கக் கொள்கைக்கு வழிவகுத்த விஞ்ஞான மேதை பெஞ்சமின் பிராங்கிளினின் கண்டு பிடிப்புக்கள் இன்றும் எமக்கு வழிகாட்டிகளாக நிற்கின்றன ●

புதிய நூல்கள்

- நெருப்பு மழை:— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் கவிதைத் தொகுதி. உணர்ச்சிக் கோலங்கள், அற்புதமான தயாரிப்பு. பக்கங்கள்: 152. தமிழ்த்தாய் பதிப்பகம், யாழ்ப்பாணம். ரூ 60.
- சிறுகதை...... பட்டறிவுக் குறிப்புகள் —வரதர். வரதர் வெளியீடு, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். ரூபா 18.
- தமிழ்த்தென்றல்: - யாதுமூரான். கவிதைகளின் தொகுப்பு. பொற்காலப் பதிப்பகம், திருநெல்வேலி கிழக்கு, யாழ் ரூ 20.
- ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்- வாமதேவன். மீரா வெளியீடு, யாழ்ப்பாணம். ரூ. 50.
- விண்ணில் அல்ல விடிவெள்ளி · தாமரைச்செல்வி. சமகால நாவல் மீரா வெளியீடு, யாழ். ரூ. 60.

A / L புவியியல் நூல்கள்

வெளிவந்து விட்டன:

- படவேலை (1:50,000 படப்பயிற்சி)
- இந்தியா (புதிய பதிப்பு)
- தேசப்படத் தொகுதி (அற்லஸ்)
- Latest map of World
- Latest map of Sri Lanka (கலர்ப் படங்கள்)
- புள்ளிவிபரவியல்
- ஏறியங்கள்
- நிலவுருவங்கள் (புதிய பதிப்பு)

க. குணராசா, M. A., SLAS,

ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

உலகின் முதற் கடற் பயணிகள்



புராதன உலகின், முதலாவது கடற் பயணிகளாக பொயினீசியன்கள் (Phoenicians) கருதப்படுகின்றனர். மத்திய தரைக் கடலின் கிழக்குக் கரையோரத்தில் வாழ்ந்த மக்கள் இவர்கள்; இன்றைய லெபனான் அன்றைய பொயினீசியர்களின் வாழிடமாகும். பொயினீசியர்களின் முக்கியமான வர்த்தகப் பொருளாக, வேறெங்கும் காண முடியாத ''மூர்ரெக்ஸ்'' (Marex) என்ற சாயம் விளங்கியது. அவர்களது கடற் கரையிலுள்ள ஒருவகை சிப்பி மீனிலிருந்து இது பெறப்பட்டது. அவர்கள் தங்களது 'ஒருபாய்' வள்ளங்களில் ஐரோப்பாவின் வட பகுதிகளுக்குப் பயணம் செய்துள்ளனர். இங்கிலாந்திற்கும் வந்துள்ளனர். செங்கடல் ஊடாக இந்து சமுத்திரத்தை அடைந்து, இந்தியாவிற்கும் வந்துள்ளனர்.

கண்டு பிடிப்புக்கள்

ஆக்கம்	கண்டறிந்தவர்.	ஆண்டு	நாடு
1. நீராவிக்கப்பல்	— ஜே. சி. பேரியர்	— 1775	பிரான்ஸ்
2. நீர் மூழ்கிக் கப்பல்	— டி. புஸ் நெல்	— 1776	ஐ. அமெரிக்
3. அணிரோய்ட் பாரமானி	— டபிள்யு. ஜே. கன்றே	— 1779	—
4. பலூன்	— ஜே. செப்மவுன்ற் கோல்பயா	— 1907	ஸ்பெயின்
5. பார சூட்	— ஏ. ஜே. கனேரின்	— 1797	பிரான்ஸ்.
6. கடிகாரம்	— ஏ. எல். பிறிகேற்	— 1792	பிரான்ஸ்.
7. மின் காந்தம்	டபிள்யூ. ஸ்ரேஜியோன்	— 1824	இங்கிலாந்து
8. குளோரபோம்	— ஈ.சௌபேரான்	— 1831	பிரான்ஸ்
9. மின்சார மோட்டார்	— எம். ஜக்கோபி	— 1834	—
10. குளிர் சாதனப் பெட்டி	— ஜே. பேர்கின்ஸ்	— 1834	பிரித்தானியா

— க. கு.

மாணாக்கர் இலக்கணம் — சாமிஜீ

மாணாக்கர் மூவகையினர். அவர் தலை, இடை, கடை மாணாக்கர் எனப்படுவர்.

அன்னத்தையும் பசுவையும் போல்வார் முதன் மாணாக்கர்; மண்ணையுங் கிளியையும் போல்வார் நடு மாணாக்கர்; பொள்ளற் குடத்தையும், ஆட்டையும், எருமையையும் போல்வார் கடை மாணாக்கர்.

அன்னம் பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலை மாத்திரங் குடித்தல் போல, முதன் மாணாக்கர் குணத்தையுங் குற்றத்தையும் வேறு பிரித்துக் குணத்தை மாத்திரங் கொள்ளுதலாலும்; பசு மிகுந்த புல்லையுடைய விடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறைய மேய்ந்து பின் போரிடத்திற் போயிருந்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக் கொண்டு மென்று தின்னல் போல, முதன் மாணாக்கர் மிகுந்த கல்வியையுடைய ஆசிரியனைக் கண்டால் அக்கல்வியைத் தன்னுள்ளம் நிறையக் கேட்டுக் கொண்டு பின்போரிடத்துப் போயிருந்து சிறிது சிறிதாக நினைவிற் கொண்டு வந்து சிந்தித்தலாலும், அவருக்கு அவ்விரண்டும் உவமானமாதலறிக

மண் உழவர் வருந்திப் பயிர் செய்யு முயற்சியளவினதாகிய விளைவைத் தன்கட் காட்டல் போல, இடை மாணாக்கர் ஆசிரியன் வருந்திக் கற்பிக்கு முயற்சியளவினதாகிய கல்வியறிவைத் தங்கட் காட்டுதலாலும், கிளி தனக்குக் கற்பித்த சொல்லையன்றி வேறொன்றையுஞ் சொல்ல மாட்டாமையாலும், அவருக்கு அவ்விரண்டும் உவமானமாதலறிக.

பொள்ளற் குடம் நீரை வார்க்குந்தோறும் ஒழுக விடுதல் போலக்

> மாணாக்கர்களில் மூன்று வகையினர் உளர்.
> நீங்கள் ஒரு மாணவரா?
> நீங்கள் எந்த வகையினர்?

கடை மாணாக்கர் நூற்பொருளைக் கற்பிக்குந்தோறும் மறந்து விடுதலாலும், ஆடு ஒரு செடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாது, செடிதோறும் போய் மேய்தல் போலக் கடை மாணாக்கர் ஓராசிரியனிடத்து மிகுந்த கல்வியிருந்தாலும் புலமை நிறையக் கற்றுக் கொள்ளாது பலரிடத்தும் போய்ப் பாடங் கேட்டலாலும்; எருமை குளத்து நீரைக் கலக்கிக் குடித்தல் போலக் கடை மாணாக்கர் ஆசிரியனை வருத்திப் பாடங்கேட்டலாலும்; பன்னாடை தேன் முதலியவற்றைக் கீழே விட்டு அவற்றிலுள்ள குற்றங்களைப் பற்றிக் கொள்ளுதல் போலக் கடை மாணாக்கர் நல்ல பொருளை மறந்து விட்டுத் தீய பொருளைச் சிந்தித்துப் பற்றிக் கொள்ளுதலாலும், அவருக்கு அந்நான்கும் உவமானமாதலறிக.

இது குறித்த நன்னூல் சூத்திரம் வருமாறு:

அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடை மாணாக்கர்.

மக்சேசே பரிசு

— சோனா.

நோபல் பரிசுக்கு உலகளாவிய மதிப்பும் அங்கீகாரமும் உண்டு என்பதை யாவரும் அறிவர். இப்பரிசுக்கு அடுத்த நிலையில் உலகக் கணிப்புக்கு உள்ளாகிப் பிரசித்தி அடைந்துள்ள ஒன்று தான், பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதி றேமன் மக்சேசே (1907 - 1957) நினைவாக 1958 ஆகஸ்ட் தொடக்கம் வழங்கப்பட்டுவரும் 'மக்சேசே பரிசு' (Magsaysay Awards)

20000 டொலர் பணம், சான்றிதழ், மக்சேசேயின் உருவம் பொறித்த தங்கப் பதக்கம் என்பன இப்பரிசில் அடங்கும், அரசுப்பணி பொதுப்பணி, சமுதாயத்தலைமை, இலக்கியமும் பொதுசனத் தொடர்பு சார் கலையாக்கமும், சர்வதேசப் பரிந்துணர்வு என்பன உடையவர்களாக நடுவர் குழுவாலே விதந்துரைக்கப்படும் ஐவருக்கு இப்பரிசு ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது. முப்பத்து நான்காண்டுகளுக்கு முன்பு (1958) றொக்ஃபெல்லர் சகோதரர், நிதியத்திலிருந்து நியூயோக்) ''ஆசியாவின் நோபல் பரிசுகள்'' எனப்படும் இது உருவாயிற்று.

பொறி திருத்தர் (Mechanic) ஆக வாழ்க்கையைத் தொடங்கிய றேமன் மக்சேசே தமது எளிமை, திறமை, ஆளுமை, நிருவாகத்திறன், பொதுமக்களின் நல்வாழ்வையே குறிக் கொண்டு தந்நல மற்றுச் சேவைபுரியும் மனப்பான்மை என்பவற்றால் பிலிப்பைன்ஸ் மக்களின் நிறைவான அன்பிற்கு உள்ளானவர்.

அமெரிக்கரின் பிடியிலிருந்து 1946, ஜூலை நான்காந் தேதி விடுதலை அடைந்த பிலிப்பைன்ஸின் பாதுகாப்பமைச்சராய் விளங்கிய காலத்தில், நாட்டில் நிலவிய குழப்பங்களையும் குழப்பத்திற்குக் காரணராயிருந்த ஹக் (Hukbalahap என்ற சொல்லின் சுருக்கம். யப்பானியருக்கு எதிரான மக்கள் படை என்பது பொருள்) இயக்கத்தினரையும் தமது அதிகாரத்தினாலல்லாது அன்பாலும் பரிந்துணர்வாலும் அடக்கி நாட்டை அமைதியும் செழிப்பும் நிறைந்த பாதையில் நடத்திச் சென்ற மக்சேசே, 1953 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்களின் 68.9 வீதமான வாக்குகளால் வெற்றி பெற்று ஜனாதிபதியானார்; 1957, மார்ச் 17 இல் விமான விபத்தொன்றில் சிக்கிச் சாவைத் தழுவினாரெனினும் மக்கள் உள்ளங்களிலே சாகா இடம் பெற்றுவிட்டார்

பெரும்பாலும் ஆசியர்களே மக்சேசே பரிசினை இதுவரைபெற்று வந்துள்ளனர். அன்னை தெரேசா, இசைப் பேரரசி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, திபெத்திய தலாய் லாமா ஆகியோர் இப்பரிசிலைப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது

O

கட்புலனறிவுப் போட்டி பரிசு ரூபா 100

1.
2.
3.
4.
5.



- ஓர் ஒழுங்கிலமைந்த வடிவங்கள் ஒரு கூட்டில் விடுபட்டுள்ளன.

1, 2, 3, 4, என இலக்கமிடப்பட்டுள்ள வடிவங்களில், விடுபட்ட கூட்டில் அமைய வேண்டிய பொருத்தமான வடிவம் யாது? இலக்கங்களை மட்டும் குறிப்பிடுக.

6.



- இவ் வடிவில் எத்தனை சதுரங்களுள்ளன?

எத்தனை முக்கோணங்கள் உள்ளன?

— க. கு.

சிற்பி' சொன்ன கதை:

வீராதி வீரன்!

பெரும் யுத்தம் ஒன்று நிகழ்ந்து முடிந்தது. அவன் யுத்தகளத்திலிருந்து மீண்டும் வீட்டிற்கு வந்தான். அவனை அவனது மனைவி அன்போடும் பெருமிதத்தோடும் வரவேற்றாள்.

" அப்பாடா...... இந்த வாளை எடுத்து வை..." — என்றான் அவன்.

" போர்க்களத்தில் எத்தனை பேரைக் களப்பலி வாங்கினீர்கள்?"

" ஐம்பது பேரின் கால்களை வெட்டினேன் ....."

" அப்படியா?"

" முப்பது பேரின் கரங்களைத் துண்டித்தேன்......"

" அப்படியா?...... ஒரு எதிரியின் தலை கூடவா கிடைக்கவில்லை?"

" என்ன செய்வேன்... எனக்கு முன் சென்றவர்கள் எதிரிகளின் தலைகளைக் கொய்து விட்டார்கள்" என்றான் அந்த 'வீர'க் கணவன்!

கவிஞர் வாஞ்சிநாதனின் 'நெருப்பு மழை' வெளியீட்டு விழாவில் திரு. சிவசரவணபவன் (சிற்பி)

மாண்டு போய் மீண்ட

வேர்ஜீனியாப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் றேமண்ட் மூடி (Dr. Raymond Moody) என்பவர் 'Life after Life' என்றொரு ஆய்வு நூலை எழுதி வெளியிட்டுள்ளார். 'மரணமடைந்து விட்டார்கள்' என மருத்துவர்களால் முடிவு செய்யப்பட்டபலர் மீண்டும் உயிர் பெற்றுள்ளார்கள்; அவர்களது 'மருத்துவ மரணம்' (Clinical Death) குறித்து றேமண்ட் மூடி, வேர்ஜீனியாப் பல்கலைக் கழக மாணவனாக இருந்த போது, மருத்துவப் பேராசிரியர் ஒருவர் தான் மாண்டு மீண்ட ஓர் அனுபவத்தை வகுப்பில் கூறினார். பின்னர் றேமண்ட் மூடி, வட கலிபோர்ணியாப் பல்கலைக் கழகம் ஒன்றில் விரிவுரையாளராக விளங்கிய போது, அவரது மாணவர் ஒருவர், தனது பாட்டி ஒருத்தியின் மாண்டு மீண்ட அனுபவத்தைக் கூறினான். இவற்றிலுள்ள வியப்பான சங்கதி யாதெனில், மருத்துவப் பேராசிரியரது அனுபவமும் பாட்டியின் அனுபவமும் ஒத்திருந்தமையாகும். அதன் பின்னர் றேமண்ட் மூடி, இத்தகைய 'மாண்டு மீண்ட' 150 பேருடைய அனுபவங்களை ஆராய்ந்துள்ளார்.

''ஒரு மனிதன் இறந்து கொண்டிருக்கிறான். அவனைப் பரிசோதித்த வைத்தியர், 'அவன் மரணமடைந்து விட்டான்' என்று கூறுகிறார். அவனுக்குத் தாள முடியாத சத்தம் ஒன்று கேட்கின்றது. பலமான மணிச்சத்தம். அதே வேளை தான் நீண்டதொரு, கருமையான சுரங்கப்பாதையூடாகச் செல்வது போன்ற உணர்வு. அதன் பின் தான் தனது உடலிலிருந்து பிரிந்து தனித்து நிற்பதை உணர்வதோடு, தனது உடல் சற்றுத் தூரத்தில் கிடப்பதையும் காண்கிறான். இறந்து போன சுற்றத்தவர்கள், நண்பர்கள் தன்னைச் சூழ்ந்து கொள்வதைப் பார்க்கிறான். ஒரு பெரு ஒளி வெள்ளம் அவன் முன் தெரிகின்றது. அதனை நெருங்க முயலும் போது, ஓர் உணர்வு கூறுகிறது: ''நீ திரும்பிப் போ. மண்ணுலக வாழ்வு இன்னமும் உனக்கு முடியவில்லை'' மாண்ட நிலையில் இருந்த மகிழ்வு, அமைதி கூறடிமுயாத உணர்வாகத் தெரிகிறது. மீண்டும் அவன் உடல் உயிர் பெறுகிறது. அவன் உயிர்க்கிறான்; — இவ்விதமாகப் பலரும் றேமண்ட் மூடியிடம் விபரித்துள்ளனர். இருள் நிறைந்த சுரங்கப் பாதை, ஒளி வெள்ளம், மணிச் சத்தம் என்பன பலரினதும் பொது அனுபவங்களாகவுள்ளன.

''மாண்டு மீண்ட' ஒரு பெண் கூறுகிறாள்: ''இருதய நோய் காரணமாக நான், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். எனது நெஞ்சில் கடும்வலி ஏற்பட்டது. எனது இருதயத் துடிப்பு நின்றதை உணர்ந்தேன். பக்கத்தில் நின்றிருந்த நர்ஸ் பலமாகக் கூச்சலிட்டாள். நான், என் உடலிலிருந்து மெதுவாக நழுவி இறங்கி, காற்றில் மிதந்து கூரைத் தளமட்டத்தில் மிதந்தபடி எனதுஉடலைப் பார்க்

கிறேன். எனது உடல் கட்டிலில் கிடக்கிறது. பலர் சுற்றிவர நிற்கிறார்கள், நர்ஸ், 'இறந்து விட்டார்' எனக் கூறுகிறாள். ஒருத்தி வாய் வழி சுவாசம் தருகிறாள், மின் அதிர்ச்சி என் இருதயத்திற்குத் தரப்படுகின்றது. எனது உடல் படுக்கையில் துள்ளி விழுந்ததைப் பார்த்தேன்''

பத்தொன்பது வயது இளைஞன் ஒருவன் தனது நண்பனுடன் வீட்டிற்குக் காரில் சென்ற போது நிகழ்ந்த விபத்தை விபரிக்கிறான்: ''எனது காருடன் ஏதோ பக்க வாட்டில் மோதியது. அதே கணம் நான் இருளூடே பயணப்பட்டது போல உணர்ந்தேன். பின்னர் அந்த விபத்து நடந்த வீதியில், 5 அடி உயரத்தில் மிதப்பதை உணர்ந்தேன். 5 யார் தூரத்தில் எனது கார் நின்றிருந்தது. மக்கள் காரைச் சூழ்ந்து நின்றிருந்தார்கள். எனது நண்பன் காரிலிருந்து வெருட்சியுடன் இறங்குவதைக் கண்டேன். எனது உடலைக் கார் இருக்கையிலிருந்து வெளியே எடுக்க முயல்கின்றனர். எனது உடல் முழுவதும் இரத்தத்தால் குளிப்பாட்டியிருக்கிறது. எனது கால்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிக் கிடக்கின்றன, எல்லாப் பக்கங்களிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். அவர்கள் என்னருகில் வந்ததும் நான் விலக முயன்றேன். ஆனால் அவர்கள் என்னூடாக நடந்து சென்றார்கள்.''

இன்னொரு பெண்ணின் மாண்டு மீண்ட அனுபவம்: மகப்பேறுக்காக நான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். ஏராளமான இரத்தக் கசிவு ஏற்பட்ட நிலையில், வைத்தியர்கள் என்னைக் கைவிட்டனர். எனது உறவினர்களிடம் நான் இறந்து கொண்டிருப்பதையும் தெரிவித்ததைக் கேட்டேன். நான் உடலிலிருந்து பிரிவதை உணர்ந்தேன். அந்த அறையின் கூரைத்தளத்தோடு இறந்துபோன எனது உறவினர்கள் மிதந்தபடி என்னை இரக்கத்தோடும் அன்போடும் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். என்னோடு படித்த ஒரு பெண்ணும் அவர்களில் இருந்தாள். அவர்கள் எனக்கு வழிகாட்ட வந்திருந்தார்கள். அது ஒர் இனிமையான வேளை. அது ஓர் அழகான அற்புதமான நேரம்.''

இவ்வாறு 'மாண்டு மீண்ட' சம்பவங்களின் கால நீட்சி எவ்வளவு என றேமண்ட் மூடி ஆராய்ந்தார். வைத்தியர்கள் சாட்சி பகர்ந்தனர். தங்களால் மருத்துவ ரீதியாக இறந்தவர்கள் எனக் கருதப்பட்டவர்கள், மீண்ட சம்பவங்களுக்கான காரணங்களை அவர்களால் விளக்க முடியவில்லை.

மாண்டு மீண்டவர்களில் சிலர் கூறுகிறார்கள்; மரணத்தைக் கண்டு நான் பயப்பிடவில்லை. இப்பொழுதே இறக்கத் தயாராகவுள்ளேன். காரணம் யாதெனில், மரணத்தின் பின் நான் எங்கு செல்கின்றேன் என்பது நான் அங்கு முன்பிருந்தமையால் நன்கு எனக்குத் தெரியும்''

டாக்டர் றேமண்ட் மூடியின் ஆய்வு முடிவுகள் புதுமையானவை, புதிரானவை ❋

ஆதாரம்: Life After Life
Raymond A Moody Jr. M. D
Published by Mocking Bird Books
Covington-1975

பேராசிரியர் கணபதிப்பிள்ளை

• சு. பாலசுந்தரம், பி. எஸ்ஸி. (சிறப்பு)

★ ★ ★ ★ ★ ★ ★

ஈழத்துத் தமிழ் அறிஞர் பலர் பல்வேறு துறைகளில் பலவகைப் பட்ட வழிமுறைகளில் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளனர். எனினும் பல்கலைக் கழக மட்டத்தில் தன் வாழ் நாளில் பெரும் பகுதியினைப் பல்கலைக் கழகத்திலே இருபத் தொன்பது ஆண்டு காலம் தொண்டாற்றித் தமிழ் அணங்கினை அலங்கரித்த பெருமைக்குரியவர் பேராசான் க. கணபதிப்பிள்ளை ஆவார்.

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் தனது ஆரம்பக்கல்வியைச் சொந்த ஊரில் கற்றுப் பின் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியிற் படித்து இலண்டன் பல்கலைக்கழகத்தார் நடாத்திய கலைமாணித் தேர்வில் முதலாவது வகுப்பில் 1930 ஆம் ஆண்டில் தேர்ச்சியடைந்தார்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர் பதவி கிடைக்கும் நோக்கில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்று அங்கு வித்துவான் பட்டம் பெற்றார். அக்காலத்தில் விபுலானந்த அடிகள் இப் பல்கலைக் கழகத்தில் உலகிலேயே முதல் தமிழ் பேராசிரியராக விளங்கினார். பின் இங்கிலாந்து சென்று இலண்டன் பல்கலைக் கழகக் கீழைநாட்டுக் கலைக்கல்லூரியிற் சேர்ந்து மொழியியல் ஆராய்ச்சியாளராகிய பேராசிரியர் ரேணர் என்பவரிடம் மொழியியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இந்தோ ஐரோப்பிய, இந்தோ ஆரிய மொழிகளை நுண்மையாகக் கற்றறிந்தார். அத்துடன் சாசனவியல் பற்றிய ஆய்வினையும் இங்கு இவர் மேற்கொண்டார். இறுதியில் ஏழாம் எட்டாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சாசனங்களை ஒழுங்கு சேர்த்து அவற்றின் மொழி இலக்கணத்தைச் செவ்வனே விளக்கி ஆராய்ச்சி நூலை எழுதி முடித்தார். இதன் பயனாக இலண்டன் பல்கலைக் கழகம் இவருக்கு கலாநிதிப் பட்டம் அளித்தது.

கலாநிதிப் பட்டத்திற்கு இவர் மேற்கொண்ட சாசனவியல் ஆய்வானது தமிழ் மொழியியல் ஆய்வுக்குப் பிறருக்கு வழிகாட்டியதுடன் முன்னோடியாகவும் அமைந்தது.

1947 ஆம் ஆண்டில் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய விபுலானந்த அடிகள் இறந்ததும் அவ்வாண்டிலேயே திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப் பட்டார்.

பேராசிரியர் அவர்கள் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம் மூலம் நாடகக் கலைக்கும் புத்துயிர் ஊட்டினார். இச் சங்கத்தின் மூலம் மாணவர்களின் நாடக இசை ஆற்றல்களையும், இலக்கியப் படைப்புக்களையும் வெளிக்கொணர்ந்தார். யாழ்ப்பாணப்பேச்சு மொழிக்கு தமது நாடகங்கள் மூலம் இலக்கிய அந்தஸ்தும் கொடுத்தார். பேராசிரியரின் நாடகப் பணியை, அவர் தம் முதன்

மாணவராகிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் மூலம் தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

பேராசிரியர் மிக எளிமையானவர். மாணவருடன் மிக நெருங்கிப் பழகும் சுபாவம் உடையவர். அவர்களின் நலன்களில் மிக்க அக்கறையுடையவர்.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளைக்கு முதல்தர மாணவ பரம்பரையுண்டு. பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் ஆ. சதாசிவம், பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, கா. சிவத்தம்பி, க. கைலாசபதி, அ. சண்முகதாஸ், சி. தில்லைநாதன் போன்றோர் அவர்தம் மாணாக்கரே ஆவர்.

பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியரின் கீழ் கற்று கலாநிதிப் பட்டம் பெற்றார். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கலாநிதிப் பட்டத்தை முதலில் வழங்கிய பெருமையும், சிறப்பும் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளைக்குரியது.

ஈற்றில் பேராசிரியர் தமிழ்த் தொண்டும், பணியும், அவர் மறைந்து இற்றைக்கு 27 ஆண்டுகள் கழிந்த போதிலும் நம்மால் உரிய முறையில் மீளாய்வு செய்யப்படவில்லை என்பது இங்கு மனங் கொள்ளத் தக்கது. *

பல்லியின் வால்

பல்லியை ஏதாவது எதிரி தாக்கும்போது வாற்பகுதி எதிரியின் பிடியில் அகப்பட்டால், பல்லி அந்த அளவு வாலை அப்படியே விட்டு விட்டுத் தப்பிக் கொள்ளும். அறுந்த வால் சிறிது நேரத்திற்குத் துடிக்கும். வாலிழந்த பல்லிக்குச் சில நாட்களிலேயே புதிதாக வால் முளைத்து விடுகிறது. பல்லி தன் வாலை விட்டு விடுவது விருப்பப்படி நிகழும் நிகழ்ச்சியாகும். பல்லியினுடைய வாலிலுள்ள எலும்புகள், மற்றைய எலும்புகளுடன் தொய்ந்த மாதிரியாக இணைந்துள்ளன. அதனால் வால் எளிதாக உடலிலிருந்து கழன்று கொள்கிறது. வால் அறுந்து போகும்போது இரத்தம் வருவதுமில்லை. ஏனெனில் இதனுடைய இரத்த நாளங்களின்முனை மூடிய நிலையில் இருக்கும். ஆகவே உடலிலிருந்து வால் துண்டாகிப் பிரியும் போது அதற்கு வலி எடுப்பதில்லை. *

- உலகிலேயே மிக உயரமான இடத்திலமைந்துள்ள தலைநகரம் லாபாஸ் (Lapaz). இது பொலிவியா நாட்டின் தலைநகர். அந்தீஸ் மலையில் 6459 மீற்றர் உயரத்திலுள்ளது.

- அலாஸ்காவிலுள்ள அன்கரேய் என்ற இடத்திலிருந்து தென் சில்லி வரை அமைந்துள்ள வீதி, 22300 கி. மீ. நீளமானது. உலகிலேயே மிக நீளமான வீதி இதுவே.

தொளாயிரமும், தொள்ளாயிரமும்.
900 9000

'999, 999' என்பதனை முன்னர் 9 இலட்சத்து 99 ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பது என வாசித்தோம். ஆனால், இப்பொழுது தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பது என வாசிக்க வேண்டும் என, (கணிதம் ஆண்டு 5- பகுதி 2ல்) கூறப்படுகிறது. இது ஆங்கில முறையைப் பின் பற்றி இலட்சம் என்பதை நீக்கி, அதற்காக (தொள்) ஆயிரம் என மாற்றியதனால் ஏற்பட்டது. ஆனால், இதில் ஒரு தவறு உண்டாகிறது.

இதன் படி '909' என்பதைத் 'தொள்ளாயிரத்து ஒன்பது' எனக் கூறுவோம். '900009' என்பதையும் தொள்ளாயிரத்து ஒன்பது' என்று' தானே கூற வேண்டும்? இது தான் அந்தத் தவறு. பிந்தியதனை முன்னர் கூறியது போல '9' இலட்சத்து என்று கூறினால் இந்தத் தவறு ஏற்படாதல்லவா?

ஆயின், ஆங்கில முறைப்படி இலக்கங்களை மும் மூன்றாகப் பிரித்து வாசிப்பதும் ஒரு நல்ல முறை தான். அப்படி வாசிப்பதனால் கணித முறையில் முன்னேற்றம் காணலாம் போலும்!

இதனால் ஏற்படும் தவற்றை நீக்க ஒரு வழியுண்டு. அது தொள்ளாயிரம் என்பதை தொளாயிரம் எனவும் வழங்க நன்னூற் காண்டிகையுரை நாவலர் பதிப்பிலும் மற்றைய பதிப்புகளிலும் உதாரணம் காட்டியுள்ளனர். ஆகவே, ஒன்றைத் 'தொள்ளாயிரம்' எனவும் மற்றையதைத் 'தொளாயிரம்' எனவும் வழங்கலாம் அல்லவா?

9ம் பக்கமும் பார்க்க பண்டிதர், வ. நடராசா, குரும்பசிட்டி.

கோடை காலத்தில் தவளை

மழை பொழிந்து குளம், குட்டைகள் நிரம்பில் தவளைகளுக்கு ஒரே கொண்டாட்டம்; ஒரே சங்கீதம்தான். குளங்கள் வறண்டு, கோடை தொடங்கியதும் தவளைகள் மாயமாக மறைந்து விடுகின்றன. எங்கு செல்கின்றன தவளை குளிர் இரத்தமுடைய பிராணி. நீரிலும் நிலத்திலும் வாழக் கூடியது. (Amphibia) கோடை தொடங்கியதும் இது குளத்தின் அடிமட்டத்துள் குழியமைத்துஅதனுள் புகுந்து மறைந்து கொள்கின்றது. தவளையின் இந் நிலையை உறங்கு நிலை (Hibernation) என்பர். உறக்க நிலையில் தவளையின் செயல்கள் மந்த மடைகின்றன. இதன் வாய், கண்கள், மூக்கு என்பன மூடியபடி இருக்கும் அதனால் அது ஈரமான சருமத்தால் சுவாசிக்கும். கோடை உறக்க நிலையில் இது சேமித்து வைத்துள்ள கொழுப்பு கரைந்து உயிர் வாழ உதவுகிறது, தவளை இதனால் இளைத்து விடுமாயினும் பிழைத்துக் கொள்ளும். மீண்டும் மழை பொழிந்ததும் உறக்க நிலையிலிருந்து மீள்கிறது. பின்னர் ஒரே சங்கீதம் தான்.

சொல்லறிவுப் போட்டி - 1 பரிசு ரூ 100

சரியான விடை எதுவெனக் கூறுக.

1. அகலறை: (அ) பாதாளம் (ஆ) பாசறை (இ) அறை (ஈ) சட்டி
2. இசைகடன்: (அ) நேர்த்திக்கடன் (ஆ) இசை (இ) இசைக் கருவி (ஈ) முறிதல்.
3. உத்தாரம்: (அ) யுக்தி (ஆ) அனுமதி (இ) மறுமொழி (ஈ) எலி
4. ஒப்பம்: (அ) உடன்படல் (ஆ) கோபப்படல் (இ) மகிழ்தல் (ஈ) துயருறல்
5. கரதலம்: (அ) உள்ளங்கை. (ஆ) கரத்தல் (இ) ஆபரணம் (ஈ) கைத்தலம்.
6. காபோதி: (அ) புறாக்கூட்டம் (ஆ) கண்ணிலி (இ) காபந்து (ஈ) சோலை வெளி.
7. கீழ்க்காற்று: (அ) கொண்டல் (ஆ) வாடை (இ) கச்சான் (ஈ) சோளகம்.
8 கூழைப்பார்வை! (அ) துயர்ப்பார்வை. (ஆ) மகிழ்வுப் பார்வை. (இ) வஞ்சகப்பார்வை (ஈ) குருடு
9. கைவினை: (அ) கம்மாளர் (ஆ) கைவேலை (இ) கீழ்க்கை (ஈ) கைத்தொழில்
10. கோட்பாடு: (அ) கொள்கை (ஆ) கருத்து (இ) வலிமை (ஈ) ஓரிடம்.
11. தாம்பு: (அ) பட்டயம் (ஆ) கயிறு (இ) செம்பு (ஈ) ஊஞ்சல்
12. தொனிப்பு: (அ) ஒலி (ஆ) சொல் (இ) தொன்மை (ஈ) பழைமை
13. நயனம்: (அ) காது (ஆ) கண் (இ) இமை (ஈ) கண்ணீர்.
14. நாவாய்: (அ) வசவு (ஆ) ஊமாந்தை (இ) மரக்கலம் (ஈ) சொல்லாமை
15. மதுகரம்: (அ) தேன்கூடு (ஆ) வண்டு (இ) முளை (ஈ) குயில்

— க. கு

இருபத்தி நான்கு மணி நேரத்தில்..........

நமது இதயம் 103689 தடவை துடிக்கிறது.

நமது இரத்தம் 2688000 கி மீ. தூரம் செல்கிறது.

நமது நகம் ·000115 செ. மீ வளர்கிறது.

நமது உடல் 1 . 43 பைந்த் வியர்வையை வெளியேற்றுகிறது.

நமது உடல் 866° வெப்பத்தை வெளியேற்றுகிறது.

நாம் 23, 043 தடவைகள் சுவாசிக்கிறோம்.

நாம் 483 கன அடி காற்றை உள்ளிழுக்கிறோம்

நாம் 70090000 மூளை அணுக்களுக்கு வேலை தருகிறோம்.

செக்கோ-சிலவாக்கியா

மத்திய ஐரோப்பாவில், ஜேர்மனி, போலாந்து, ஹங்கேரி, ஆஸ்திரியா, முன்னைய சோவியத் சமவுடைமைக் குடியரசு என்பன வற்றை எல்லைகளாகக் கொண்டு செக்கோ சிலவாக்கியா அமைந்துள்ளது. இலங்கையின் குடித்தொகையைக் கொண்டுள்ள செக்கோ சிலவாக்கியாவில் செக்கியர் 64% உள்ளனர்; சிலவாக்கியர் 30% உள்ளனர். இது ஏறத்தாழ இலங்கையின் இன விகிதத்தை ஒத்துள்ளது. தமது கலாசாரப் பண்பையும் இறைமையையும் பேணுவதற்காக அவர்கள் இனரீதியாக 'செக்' எனவும் 'சிலாவாக்' எனவும் இரு நாடுகளாகப் பிரிந்து ஒற்றுமையைப் பேணவுள்ளனர்.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்த பின்னர் ஐரோப்பாவில் உருவாக்கப்பட்ட புதிய நாடுகளில் ஒன்று செக்கோ சிலாவாக்கியா ஆகும். இது பொகிமியா, மோரேவியா, சிலாவாக்கியா எனும் மூன்று இயற்கைப் பிரதேசங்களைக் கொண்டுள்ளது. 5 ஆம் நூற்றாண்டில் செக்கியர் என்ற இன மக்கள் பொகிமியா — மோரேவியாப் பகுதிகளில் குடியேறி தமக்கென மோரேவிய அரசு என்ற ஒன்றைத் தாபித்துக் கொண்டனர். அதே போல

"அரவிந்தன்"

சிலாவாக்கியர் என்ற இனமக்கள் சிலாவாக்கியாப் பிரதேசத்தில் குடியேறியிருந்தனர். இவ்விரு பகுதிகளும் யுத்தகாலத்தில் அயல் நாடுகளான ஜேர்மனி, போலாந்து, ஹங்கேரி என்பன வற்றால் பங்கு போடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. யுத்த முடிவில் செக் இன மக்கள் வாழ்ந்த பகுதியும், சிலவாக்கிய இன மக்கள் வாழ்ந்த பகுதியும் ஒன்றாக இணைக்கப்பட்டு 'செக்கோசிலாவாக்கிய' என்ற ஒரே நாடாக்கப்பட்டது. தனித்தனி அரசுகளாக விளங்கிய தமிழரசையும் சிங்கள அரசையும் ஆங்கில அரசு ஒன்றாக்கி விட்டுச் சென்ற மாதிரியான நிகழ்வு அங்கும் நிகழ்ந்தது. 1948 ஆம் ஆண்டிலிருந்து கம்யூனிச நாடாக அது விளங்கிவருகின்றது.

பரப்பு: 127,896 சதுர கிலோ மீற்றர்
குடித்தொகை: 1,5 5,03,000.(செக்கியர்: 64% சிலவாக்கியர்;30%)
தலைநகர்: பிரேகு (Prague)
பணம்: கொரூனா (Koruna)
மொழி: செக், சிலவாக், ஹங்கேரி
சமயம்: ரோமன் கத்தோலிக்கம் — 70%. செக்கோசிலவாக் சேர்ச் — 8%. புரட்டஸ்தாந்து — 7%
கல்வியறிவு: 100%
தலாவருமானம்: 5820 டொலர்.
விவசாயத் தொழிலாளர் — 14% கோதுமை, றை, ஓட்ஸ், உருளைக்கிழங்கு, பீற்கிழங்கு. கைத்தொழிலீடுபட்டுள்ளோர் — 39% இரும்புருக்கு, இயந்திரங்கள், சீமேந்து, நெசவு, மோட்டார் வாகனம்.

செக்கியர் சிலாவாக்கியர் ஆகிய இரு பிரிவினருக்கும் அரசியலமைப்புப்படி சமவுரிமையுண்டு. எனினும், சிலாவாக்கிய மக்கள் தமது தனித்துவத்தையும் அடையாளத்தையும்பேண ஆசைப்பட்டனர் முன்னைய சோவியத்ஜனாதிபதி மிக்கல் கொப்பர் சேவ்வின் 'பெரஸ்ரோயிக்கா' சீர்திருத்தம் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிச சார்பு நாடுகளுக்குப் புத்தூக்கமளித்தது. அவை பிரிந்தும் இணைந்தும் தமது தனித்துவத்தைப் பேணிக் கொண்டன. அந்தச் சுதந்திர அலை இன்று செக்கோசிலவாக்கியாவிலும் வீசுகின்றது.

முன்னைய சோவியத் சமவுடைமைக் குடியரசின் சட்டுப்பாட்டின் கீழ், செக்கோசிலவாக்கிய ஆட்சியாளர்கள் இயங்கி வந்துள்ளனர். முரண்பாடுகள் இடையிடையே தோன்றின. குறிப்பாக 1968 ஆகஸ்ட் 20 ஆம் திகதி 600,000 சோவியத் துருப்புக்கள் செக்கோசிலாவாக்கியாவினுள் அத்துமீறிப் பலாத்காரமாகப் புகுந்து அந்நாட்டைத் தமது கட்டுப்பாட்டுள் கொண்டு வந்தன. அத்தோடு செக்கோ சிலாவாக்கியாவில் ஆட்சியாளரையும் கைது செய்தது. பின்னர் 1969 இல் நிகழ்ந்த ஒப்பந்தப்படி, செக்கோ சிலாவாக்கியாவில் முன்னைய சோ. ச. குடியரசிலிருந்து, அங்கத்துவ நாடுகள் பிரிய முயன்றால், சோவியத் துருப்புக்கள் ஆக்கிரமிக்கும் என்ற பயமுறுத்தல் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கட்டுப்படுத்தியது. எனினும் 1675 இல் ஹெல்சிங்கியில் நிகழ்ந்த மாநாடு ஒன்றில், செக்கோ சிலாவாக்கியாவின் பூரண சுதந்திரம் வற்புறுத்தப்பட்டது. 'சாற்ற 77. (charter 77) என்ற நிறுவனம் அறிவாளிகளையும் அரசியல் வாதிகளையும் இணைத்துக் கொண்டு இதனை வற்புறுத்தியது.

★ இலங்கையைப் போலவே செக்கோ- சிலவாக்கியாவும் இரு இனங்களைக் கொண்ட நாடு. அங்குள்ள சிறுபான்மை இனத்தவர், தாம் பிரிந்து சென்று தனி நாடாக விரும்பினர். பெரும்பான்மையினர் மிக நாகரிகமாக அதை ஏற்றுக் கொண்டனர். ★ ★ ★ ★ ★

சோவியத் சமவுரிமைக் குடியரசின் கலைப்போடு, செக்கோசிலாவாக்கிய, சோவியத் குடியரசின் கட்டுப்பாட்டிலிருந்து பூரணமாக விலகிக் கொண்டது. அமைதியான முறையில் புரிந்துகொள்ள வேண்டுமென்பதில் இரு இன மக்களின் அரசியல் தலைவர்களும் அக்கறை கொண்டுள்ளனர். யூகோ சிலாவியா மாதிரி இரத்த ஆறு தமது நாட்டில் பாய்வதை அவர்கள் விரும்பவில்லை. சிலாவாக்கிய அரசியல் தலைவர் விளாடிமிர்செக்கியர், சிலவாக்கிய அரசியல் தலைவர் வாக்லவ் க்ளாஸ் ஆகிய இருவரிலும், பிரிவினையைப் பின்னவர் அவ்வளவு தூரம் விரும்பவில்லை. ஆனால். சிறுபான்மையினச் சிலாவாக்கியத் தலைவர் 'நாம் சிலாவாக்கிய தேசத்தை உருவாக்கி, நமது இனத்தின் தனித்துவத்தைப் (identity) பேண விரும்புகிறோம்' என்றார். இந்த வேண்டுகோளின் தார்மீகத்தை உணர்ந்து செக்கியத் தலைவர் 'அவ்வாறாயின் நாம் நாகரிகமாக விவாகரத்துச் செய்து கொள்வோம்'' என்றார். விரைவில் செக்கோ சிலாவாக்கியா தனித் தனியாகப் பிரிந்து தத்தமது இறைமையைப் பேணிக் கொள்ளவுள்ளன என எதிர்பார்க்கப்படுகின்றது. ●

கண்ணனின் பெருமை

★ ★ ★ ★ ★ ஹேமலோஜினி கனகரத்தினம்

பரிசுக் கதை

கணித ஆசிரியர் வகுப்பறையில் நுழைந்ததும் அமைதி வாய் பொத்திக் கிடந்தது ஆசிரியரின் மகிழ்ச்சி நீண்ட நேரம் நீடிக்க வில்லை. காரணம் கரும்பலகையில் கண்ணாடி அணிந்த வழுக்கைத் தலையோடு தொப்பை வயிற்றோடும் கையில் பிரம்பு வைத்திருக்கும் ஓர் உருவம் வரையப்பட்டு கீழே "கணித வாத்தியார்" என்று கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

"யார் இதை வரைந்தது"

ஆசிரியரின் சிவந்த பார்வையை தாங்க முடியாத மாணவர்கள் தலை குனிந்தனர். வகுப்பில் அமைதி நிலவியது. ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர்.

"இப்படத்தை வரைந்தவன் உண்மையை ஒப்புக் கொண்டால் விட்டு விடுவேன். இல்லையெனின் என்னைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும்" எனக் கூறி பிரம்பைக் கையில் எடுத்தார் ஆசிரியர். மறுபடியும் மௌனம். வகுப்பில் மாணவர் அமைதியாக இருப்பது அவருக்கு பிடித்தமான ஒன்று தான். ஆனால் இன்றைய அமைதி?

முதல் வரிசையில் அமர்ந்திருந்த ராஜாவிடம் பார்வையைச் செலுத்தினார் ஆசிரியர்.

"ராஜா, நீ சொல். இந்த வேலையை யார் செய்தது?

"எனக்குத் தெரியாது சேர்' நான் கணக்கு செய்து கொண்டிருந்தேன்' என்றான் ராஜா.

குமார், நீயா?

"நான் இல்லை சேர் எனக்குத் தெரியாது"

மாணவர்களுக்குள் இருக்கும் இந்த பலமான ஒற்றுமையை புரிந்து கொள்ள ஆசிரியருக்கு வெகு நேரம் ஆகவில்லை.

படம் வரைந்தவனை காட்டிக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையை ஆசிரியர் இழந்தார். ஆனால் மன்னிக்கவும் மனம் இல்லை.

"எல்லோரும் எழுந்திருங்கள். தப்பு செய்தால் தண்டனை உண்டு. யாரோ ஒருவன் செய்த தவறுக்கு நீங்கள் அனைவரும் ஒத்துப் போவதால் எல்லோரும் கையை நீட்டுங்கள்" என்று பிரம்புடன் முன் வரிசைக்கு வந்தார்.

மாணவர்கள் எழுந்து நின்றனர். அவர்களின் கண்களில் பயம் படர்ந்திருந்தது. முதல் மாணவன் கண்களை மூடிக் கொண்டு தண்டனையை ஏற்க கையை நீட்டினான். ஆசிரியர் வேகமாக பிரம்பை உயர்த்திய போது.

"நான் தான் சேர் வரைந்தேன்" என்று கடைசி வாங்கிலிருந்து குரல் வந்தது. பிரம்பை

(மறு பக்கம் பார்க்க)

நுண்ணறிவுப் போட்டி-3 பரிசு ரூபா 366/-

1. தைப் பொங்கல் திருநாள். அம்மா பொங்கல் பொங்கினார். பொங்கலுக்கு ஒவ்வொரு முந்திரிப் பருப்புக்கும் இவ்விரு முந்திரி வத்தல் இட்டார். மொத்தமாக 600 முந்திரிப் பருப்புகளும் முந்திரி வத்தல்களும் இடப்பட்டிருந்தால் பொங்கலில் எத்தனை முந்திரி வத்தல்கள் இடப்பட்டன?

2. அடைப்புக் குறிக்குள் விடுபட்ட சொல்லை எழுதுக.

3 6 2 (சி வா ய ந ம) 54

54 3 (..................) 62.

3. பாதாள பைரவிக் கதையொன்று சொல்கிறேன். இளவரசனுக்கு நாகபுஷ்பம் ஒன்று தேவைப்பட்டது. நாகலோகத்தின் மூன்று வாசல்களைக் கடந்து தான் அப்புஷ்பம் இருக்கின்ற இடத்திற்குச் செல்ல வேண்டும். ஒவ்வொரு வாசல் காவலரும், 'நீ கொண்டு வரும் புஷ்பங்களில் அரைவாசியையும் மேலதிகமாக ஒன்றையும் தர வேண்டும்' என வற்புறுத்தினர். அவனுக்கு ஒரு புஷ்பம் தான் வேண்டும்; ஒப்புக் கொண்டு மூன்று வாசல்களையும் கடந்து புஷ்பங்கள் உள்ள தோட்டத்திற்குச் சென்றான். ஒரு புஷ்பத்திற்குக் கூடுதலாக எடுத்துக் கொண்டு நாகலோகத்திற்கு வெளியில் சென்றால் தலை வெடித்து விடும் என ஒரு சாபமும் இருக்கின்றது. இளவரசன் எத்தனை புஷ்பங்களைப் பறித்தால் ஒரு புஷ்பத்தோடு வெளி வரலாம்?

— க.கு.

(38 ஆம் பக்கம் பார்க்க)

ஒதுக்கி விட்டு குரல் வந்த இடத்தை. நோக்கினார். கண்ணன் என்ற மாணவன் பயந்தபடி ஆசிரியரை நோக்கி வந்தான். வந்தவன் கலங்கிய கண்களோடு கையை நீட்டினான்.

''முதலிலேயே நீ ஏன் உண்மையைச் சொல்லவில்லை'' நான் எவ்வளவு நேரம் கேட்டேன். என்று ஆசிரியர் அதட்டலுடன் கேட்டார்.

'' தெரியாமல் செய்திட்டேன் சேர். நீங்கள் அடிப்பீங்கள் என்று தான் உண்மையைச் சொல்லவில்லை'' என்று அழுதான் கண்ணன்.

'' தப்புச் செய்யும் போது அது தெரிய வேண்டும் அது சரி. இப்ப நீ ஏன் உண்மையை ஒப்புக் கொண்டாய்? '' என்று புரியாமல் கேட்டார் ஆசிரியர்.

''இத்தனை பேரும் எனக்காக, என்னைக் காட்டிக் கொடுக்காமல் இருந்தார்கள். இப்படி எனக்காக இருந்தவர்கள் நான் செய்த தவறுக்காக தண்டனை அனுபவிப்பது எப்படி நியாயமாகும்? என் மனது கேட்கவில்லை. அதனால் தான் உண்மையை ஒப்புக்கொண்டேன்'' ஓங்கிய பிரம்பு தண்டிக்கவில்லை. ஆசிரியர் பிரம்பை மேசை மீது 'பொத்' தென வைத்து விட்டுக் கண்ணனைப் பெருமையுடன் பார்த்தார்,

○

புலானி மக்கள்

"செங்கை ஆழியான்"

வட நைஜீரியாவில் சூடான் சவன்னா என்று அழைக்கப்படும் புல்வெளிப்பரப்பில் புலானி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மழை காலத்தில் செழித்து வளரும் புற்களை நம்பி மாடுகளை மேய்த்து, அதன் வருவாயில் சீவித்து வரும் மந்தை மேய்க்கும் கூட்டத்தினராகப் புலானி மக்கள் உள்ளனர். இவர்கள் நாடோடிகளாவர். நிரந்தரமாக ஒரு வதிவிடத்தில் வாழாது மந்தைகளோடு பருவத்திற்குப் பருவம் புல் வெளிகளை நாடி அலைந்து திரிவர்.

புலானி மக்கள் நீக்கிரோவர் போல கடும் கருநிறம் கொண்டவர்களல்லர், சற்றுக் கபிலநிறம் கொண்டவர்கள். அராபிய இனத்தைச் சார்ந்தவர்களென இவர்களைக் கூறுவர். உயர்ந்த உருவம்: அழகான தோற்றம் கொண்டவர்கள்.

இன்று புலானி மக்களில் ஒரு பகுதியினர் நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கி வாழத் தலைப்பட்டுள்ளனர். நாடோடிகளாக மந்தை மேய்ப்போர் கூட்டங் கூட்டமாகக் காணப்படுவர். பல குடும்பங்கள் சேர்ந்த ஒரு கூட்டத்திற்கு ஒரு தலைவன். பலதாரமணம் புலானிகளிடையே காணப்படுகின்றது.

மாரிகாலத்தில் ஓரளவு நிரந்தரமாக ஓரிடத்தில் வாழ்வர். ஏனெனில் அக்காலத்தில் பசும் புற்கள் வளர்ந்து மேய்ச்சலிற்கு உதவுகின்றன. மழையற்ற வறட்சிப் பருவத்தில் தான் இடம் பெயர்வர். ஒரு கூட்டத் தலைவனுக்கு நூற்றுக் கணக்கான மாடுகள் சொந்தமாக இருக்கும். இவர்கள் தற்காலிகமாக அமைத்துக்கொள்ளும் வீடு 'புக்கா' எனப்படும். தடிகள், புற்கள், சோளக் கம்புகள் என்பனவற்றால் பிணைத்து தாதுகோப வடிவில்

அமைக்கப்பட்டிருக்கும். வீடு அமைக்கும் பணி பெண்களுக்குரியது, வளர்ந்தோருக்கும், சிறுவர்களுக்கும் தனித்தனியே 'புக்கா'க்கள் அமைக்கப்படும். புலானி மக்களின் சொத்துக்கள் குறைவு. பால் சேகரிக்கும் பாத்திரங்கள், தயிர் கடையும் மத்து, பனையோலைப் பாய்கள், என்பனவே அவர்களது ஏதனங்கள்.

காட்டு விலங்குகள் (சிறுத்தை, கழுதைபபுலி, ஓநாய்) இரத்தம் உறிஞ்சும் அட்டை என்பன மந்தைகளுக்குச் சேதத்தை ஏற்படுத்துகின்றன. வில், அம்பு கொண்டு காட்டு விலங்குகளை வேட்டையாடித் துரத்துவர். இரத்தம் உறிஞ்சும் அட்டைகளைப் பிடுங்கி எறிந்து கொல்வதுடன், அவற்றால் மந்தைகளுக்கு ஏற்பட்ட காயங்களை பழுக்கக் காய்ச்சிய இரும்புத்துண்டால் சுட்டுக் காய வைப்பர்.

மந்தை மேய்ப்போர் காடு, வெளி எல்லாம் வெறும் காலுடன் அலைவர். அவர்களுடைய பாதங்கள் கெட்டித்து முட்கள் தைக்காதளவிற்கு கடினப்பட்டுள்ளன. அவர்களது தலைமயிர் நேரானவை ஆண்கள் முழங்காலிற்குக் கீழ்வரை மூடக்க கூடிய காற் சட்டைகளை அணிந்து, தொளதொள வென மேற்சட்டை அணிந்திருப்பர். பெண்கள் அரையில் ஒரு துண்டு சுற்றியிருப்பர். வெண்கல ஆபரணங்களை அணிவர். புற்கள், மரப்பட்டைகள் என்பனவற்றிலிருந்து கயிறு திரிப்பர் பால், வெண்ணெய், சோளம் இவர்களது உணவில் முக்கியவிடம் பெறும். அயற்புற நகரங்களில் கிராமங்களில் பால், வெண்ணெய் என்பனவற்றைக் கொடுத்துப் பண்டைமாற்றமாக சோளம், மிளகு வாசனைத் திரவியங்கள் என்பனவற்றைப் பெறுவர். மாலை நேர

ஆபிரிக்காவில் வட நைஜீரியாவில் வாழும் பழங்குடி மக்கள் ''புலானியர்''

இவர்களைப்பற்றிய பலசுவையான செய்திகள் இக் கட்டுரையில் தரப்பட்டுள்ளன.

உணவே இவர்களுக்குப் பிரதானமானது. உரலிலிட்டு உலக்கையால் மாவாக்கப்பட்ட சோளத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நியிற் என்ற உணவைப்பாலுடன் விரும்பியுண்பர். திருமண வைபவங்களின் போது அல்லது பிள்ளைக்குப் பெயரிடும் போது மட்டுமே அவர்கள் இறைச்சி உண்பர்.

மாடுகள் குடில்கள் சூழ்ந்தமைந்த நடு மைதானத்தில் இரவில் தங்கவிடப்படும் ஒவ்வொரு நாள் மாலை வேளையிலும் ஒவ்வொரு மாடும் கவனமாகப் பரிசோதிக்கப் 'படும் காயம் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா, நோய்வாய்ப்பட்டிருக்கிறதா என அவதானமாகப் பார்க்கப்படும்.

மாலை உணவு முடிந்ததும் மேளங்கள் தட்டி நடனமாடுவர். புல்லாங்குழல் இசைப்பர். மாட்டுக் கொம்பினால் செய்த 'வாத்தியத்தை ஊதுவர். பௌர்ணமி நாளில் அவர்களது நடன நிகழ்வு சிறப்பாக இருக்கும்.

புலானி மக்கள் கல்விகற்றவர்களல்லர், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். ஆனால், அமைதியான, நிம்மதியான, இனிமையான வாழ்க்கையை அனுபவிப்பவர்கள். கல்வியால் கிடைக்கும் அறிவு, தொழில் நுட்பவிருத்தி, நாகரிகம் என்பன அவர்களது வாழ்வின் இனிமையை அழிக்க இன்னமும் முயலவில்லை.

டொக்டர் எம்.கே. முருகானந்தன்,

ஸ்டெதஸ் கோப்

கழுத்தில் ஸ்டெதஸ் கோப் தொங்க, சப்பாத்தின் ஓசை அமைதியைக் கலைக்க, அவசர அவசரமாகத் திரியும் டொக்டர்களைக் கண்டு நீங்கள் பிரமித்திருக்கக் கூடும்.

உங்களுக்கு நன்கு தெரிந்த ஸ்டெதஸ் கோப் பற்றி சில தெரியாத தகவல்கள் இதோ:

ஸ்டெதஸ் கோப்பின் மேல் முனையில் காதுகளில் பொருந்தக் கூடியதான இரு உலோகக் குழாய்கள்; மறு முனையில் மெல்லிய தகட்டால் மூடப்பட்ட வட்டச் சில்லும் (Crise) கூம்பும் (Cone) சேர்ந்த பகுதி. இரு முனைகளையும் ஒரு ரப்பர் குழாய் இணைத்திருக்கும்.

உடலில் உள்ள இருதயம், சுவாசப்பை, குடல், இரத்தக் குழாய்கள் போன்ற உறுப்புக்களில் எழும் சாதாரண ஓசைகளையும், நோயினால் அவ்வோசைகளில் ஏற்படும் மாற்றங்களையும் அவதானத்துடன் கேட்டு நோயை நிர்ணயிக்க இந்த ஸ்டெதஸ் கோப்புகள் உதவுகின்றன. இரத்த அழுத்தத்தை அளவிடவும் அது உதவுகிறது.

இது முதன் முதலாக வடிவமைக்கப்பட்டது 1819 ஆம் ஆண்டாகும். இதைக் கண்டு பிடித்த அறிஞர், பிரான்ஸ் தேசத்தின் புகழ் பெற்ற மருத்துவராகிய டொக்டர் ரெனிதியோபில் லனெக் (Dr Rene Theophile Laennec) ஆவர்.

கொழுத்த தடித்த நோயாளிகளின் இருதயத் துடிப்புகளை நேரடியாகக் காதை வைத்துக் கேட்பது சிரமம் என்பதை உணர்ந்த அவர், தடித்த சில கடதாசிகளைச் சுருட்டி, குழாய் போன்று செய்து, ஒரு முனையைத் தமது காதில் வைத்தும் மறு முனையை நோயாளியின் மார்பில் வைத்தும் பரிசோதிக்க ஆரம்பித்தார். ஓசை தெளிவாகக் கேட்டது. இதுவே ஸ்டெதஸ் கோப்பின் முன்னோடி.

பின்பு உபயோகத்துக்கு வசதியாக அதனை மரக்குழாயில் வடிவமைத்தார். ஒரு அடி நீளமும், ஒன்றரை அங்குல விட்டமும் உடைய மரக்குழாயையே அவர் உபயோகித்தார். குழாயின் துவாரத்தை ஒரு பக்க முனையில் ஒன்றரை அங்குல நீளத்திற்குப் புனல்வடிவில் விசாலமாக்கினார். இதனால் ஓசைகளை மேலும் தெளிவாகக் கேட்கக் கூடியதாக இருந்தது. மருத்துவப் பையில் வைத்துக் கொண்டு செல்வதற்கு வசதியாக அதன் நீளத்தைக் குறைப்பதற்காக அதனை இரு சம நீளத்துண்டுகளாக வெட்டி, வேண்டிய போது இணைப்பதற்கு ஏற்ப திருகாணி- சுரை- முறையைப் பயன்படுத்தினார். இது ஒரு காதை மட்டும் பயன்படுத்தும் ஸ்டெதஸ் கோப் ஆகும்.

இப்பொழுதுள்ள இரு காதுகளையும் உபயோகிக்கும் நவீன முறையிலான ஸ்டெதஸ் கோப்பை விருத்தி செய்தவர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சார்ந்த டொக்டர் ஜோர்ஜ் பிலிப் காமன் (Dr Georgephilip Cam nan) ஆவர். 1855ம் ஆண்டில் வடிவமைக்கப்பட்ட இதன் காதுமுனை, காதுகளை மூடியிருக்குமாறு அகலமாக அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது காதுமுனைகள், காதுத் துவாரத்திற்குப் பொருந்துமாறு சிறிதாக அமைக்கப்பட்டிருப்பதே முக்கிய வேறுபாடாகும். ●

‘அறிவுக் களஞ்சியம்’ குறுக்கெழுத்துப் போட்டி –2 ‘சோனா’

1 ச	2 மா	தா	ன	ம்	■	3 கோ	4 து
■	ம்	■	■	■	5 தொ	ள்	ளை
6 நி	ப	ந்	7 த	னை	■	■	■
■	ழ	■	லை	■	8 மா	9 தா	ய்
10 ச	ம	11 ப	வ	ம்	■	ந்	■
த்	■	12	ன்	■	13	தி	14
நி	■		■	15 வி	ந	■	தி

இடமிருந்து வலம்

1. கடந்த காலத்தில் எமது அரசியல் தலைவர்கள் ஆட்சியாளருடன் மேற்கொண்ட இதற்கான முயற்சிகள் தோல்வியே கண்டன.
3. இது உள்ள மனம் குறுகுறுக்கும்
5. மாசாய் மக்கள் வேற்றின மக்களின் மந்தைகளை இவ்வழியிலும் கொள்வதுண்டு.
6. கட்டுப்பாடு என்பது இச்சொல்லின் சரியான தமிழ் வடிவம்.
8. இவர்கள் தமது ஆள்புலங்களிலே பிறர் நுழைய அநுமதிக்கமாட்டார்கள்.
10. நிகழ்ச்சி என்ற தமிழ்ச் சொல்லுக்கான வட சொல்
12. தமிழிலக்கணத்தில் படர்க்கையிடத்தில் வரும் இச்சொல் வேற்றுமையுருபை ஏற்கையில் தொடக்கத்தில் உள்ள நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாகக் குறுகச் செய்யும்.
13. மேன்மை மிக்க என்ற பொருள் தரும் பெயரடைச் சொல்.
15. ... ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? என்பது பழமொழி.

மேலிருந்து கீழ்

2. முக்கனிகளுள் ஒன்று.
3. கிரகத்தைக் குறிக்கும் தமிழ்ப் பெயர்.
4. துவாரம்.
7. ஒரு குழு, சமுகம், நாடு, என்பவற்றை வழிகாட்டி நடத்தும் மேலாளன்.
9. அமைதி என்ற பொருள் தரும் வடசொல்லின் ஈற்றெழுத்து மறைந்து விட்டது.
10. ஆற்றல் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
11. இந்த ஆசை தலைக்கேறினால் எந்தக் குறுக்கு வழியைக் கையாள்வதற்கும் சிலர் தயங்குவதில்லை.
13. மீத்திறன் உடையவரைக் குறிக்க வழங்கும் இரண்டெழுத்து வடசொல். இத்திறனுடைய சிறுவன் எம் நாட்டவன் என்பது எமக்குப் பெருமை தருவதாகும்.
14. கடலில் வாழும் பிராணி, தரையில் வாழும் விலங்கின் பெயரையும் தன்னோடு சேர்த்துக் கொண்டுள்ளது. ஆனால் அந்தச் சொல்லின் கடைசி எழுத்து, காணாமல் போய் விட்டதே!

(38ம் பக்கம் பார்க்க)

இலகுவில் இனம் காண முடியாத

இலைப்பூச்சியும்,

சூழலில் மறைந்து கொள்ளக் கூடிய தோற்றத்தைக் கொண்ட பூச்சிகள் பலவுள்ளன. இலைப் பூச்சி (Leaf Insect) தடிபபூச்சி (Stiek Insect) என்பன அவற்றில் இரண்டாகும். இவை தாவரங்களில் பற்றி இருக்கும் போது இவற்றை இலகுவில் இனங்காண முடியாது. இலைப்பூச்சி, இலையில் அமர்ந்திருக்கும் போது, அதனை இலையிலிருந்து வேறு படுத்த முடி

யாது. அதன் பச்சை நிறமும் உடலிலுள்ள இலை நரம்பு வடிவமும் சூழலோடு அதனை அற்புதமாகப் பிணைத்திருக்கும். தடிப் பூச்சிகள் மரப்பட்டை நிறமானவையாயும் (கபிலநிறம்) குச்சி குச்சியான கால்களையும் கொண்டு காணப்படுவன. இவற்றின் தோற்றம் காய்ந்த குச்சி போன்றிருப்பதால் இவற்றையும் வேறுபடுத்தி இனங் காண்பது கடினமாகும். இவ்விருவகைப் பூச்சிகளும் பகற் பொழுதுகளில் அசைவின்றி நீண்ட நேரம் தாவரத்தில் அமர்ந்திருப்பதால் அவற்றை அடையாளம் காண்பது சிரமம். நகரும் போது பூச்சிதானா என

அதிசயிக்க நேரிடும். அயன மண்டலக்காடுகளில் இவை காணப்படுகின்றன.

இவை சூழலில் தம்மை இனங் காணாது மறைத்துக் கொள்வதால் எதிரிகளிடமிருந்து தம்மைப்

தடிப் பூச்சியும்,

பாதுகாத்துக் கொள்வதுடன், தமக்குரிய பூச்சிகளை இலகுவில் இரையாகக் கொள்ளவும் வாய்ப்பாகின்றது. இவற்றிற்கு ஆறு கால்களுள்ளன. முன்னங்கால்களிரண்டும் இரையைப் பற்றத் தயார் நிலையில் இருப்பனவாகும்.

இலைப்பூச்சிகளிலும் தடிப்பூச்சிகளிலும் ஏறத்தாழ 2,000 வகையுள்ளன. அயனமண்டல கீழைத்தேச பகுதிகளில் இவை அதிகம் காணப்படுகின்றன. சில வகைகளை வட ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் காணலாம்.

பரிசுக் கட்டுரை * * * * *

இதோ ஒரு துருவ நட்சத்திரம்!

பொ. மகிழ் நங்கை.

''கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர் — எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர் அவ்வீரர் — தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினை காப்பர்''

— என்றிசைத்த மகாகவி பாரதியாரின் வேட்கைக்கு இலக்கணம் வகுத்து, எம் தமிழீழ வீரர் அணிதிரளும் இந்நாளில், தமிழீழ மக்களாகிய நாம் எம் தற்கால கடமைகளையும், தேசத்திற்கு நாம் செய்ய வேண்டிய சேவைகளையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாகிறோம்.

எங்களுடைய தேசத்தில் எம் சகோதரர்களும், எம்முயிரை ஒத்த தமிழ்மொழியும் ஒடுக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்டிருந்த ஒரு காலத்திலே தான் எம்முடைய விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்று பெருமளவில் வளர்ச்சியடைந்து மாவீரர் எனும் விழுதுகளை பரப்பிய பெரியதொரு ஆலமரமாக நிமிர்ந்து நிற்கிறது. ஆனாலும் இன்னமும் அந்நியப் படைகளின் துப்பாக்கி இனத்து வேஷத்துடனும், காட்டுமிராண்டித் தனத்துடனும் எம் அனைவரது இதயங்களையும் குறி பார்த்துக் கொண்டே இருக்கிறது. இன்றைய சூழ் நிலையில் நாம் ஒவ்வொருவரும் ''இன்று என்னுடைய தேசத்திற்காக நான் என்ன செய்ய வேண்டும்?'' என்ற கேள்வியை எமக்கு நாமே கேட்க வேண்டியவர்கள்.

'ஆக்கத்திலே, தொழில் ஊக்கத்திலே, புயவீக்கத்திலே, உயர் நோக்கத்திலே' நின்று போராடியபடி எம்தேசம் ஒரு சுதந்திரமான உலகத்திலே மெச்சக் கூடிய தமிழீழப் பிரசைகளை உருவாக்கத் துடித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் எம் பழம்பெரும் பண்பாட்டைப் பேணிக்காக்க வேண்டிய கடப்பாடு தமிழீழ மக்கள் அனைவருக்குமே உரியது. அந்நியர் போற்றும் எம் தமிழ்க் கலாசாரம் தற்காலத்தில் சில புல்லுருவிகளால், வெளிநாட்டு மோகிகளால் கற்பழிக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

எம்முடைய பண்பாடு எம்முடைய மொழி இவையெல்லாம் உயிருக்கு நேரானவை. எம்முடைய மூச்சை சுதந்திரமாக்குவதற்காய் எம்மவர் தோள்கள் துப்பாக்கி சுமக்கும் போது, எம்முடைய பழம்பெரும் புகழைப் பாதுகாத்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் கருவூலங்

களாக நாம் இருக்கின்றோம். எமது கடமைகளை மறந்து எம் சேவையிலிருந்து நழுவுதல் மிகுந்த ஈனத்திற்குரியதாகும்.

எமது பனை வடலிகளும், எம்மினிய தென்னந் தோட்டங்களும் நஞ்சாகிப் போக விடாமல் இருக்க, எமது பண்பாடு சீர்கெடாதிருக்க, எம்மனங்கள் இலட்சியங்களைத் தூக்க வேண்டும்!

எமது நாடு மீட்கப்படத்தான் போகிறது. எம்முடைய தமிழன்னையின் கைவிலங்கு உடையத்தான் போகிறது. ஆனால் .... எம் சமுதாயம் உலகிற்கே எடுத்துக் காட்டாக விளங்கப் போகிறதா என்பது மிகவும் சந்தேகத்திற்குரியதே!

ஏனென்றால் தன் சுதந்திர மூச்சையே எதிரியிடமே விற்க முனைவோரும், எம் புனித யாகத்தைப் புரிந்து கொள்ளாத, புரிந்து கொள்ள முடியாத மனிதர்களும், பதுக்கற் காரர்களும், எம் தமிழ்ப் பண்பாட்டை விற்க முயலும் இன்றைய இளைஞர் சமுதாயமும், ... ஓ! இந்தச் சீர்கேடுகளை என் தேசம் எப்படி நிவர்த்திக்கப் போகிறது?

எனவே எம்முடைய தேசத்தின் தேவையை உணர்ந்து எம் சேவையைச் செவ்வனே செய்ய உறுதிபூண வேண்டும். 'முப்பது கோடியும் வாழ்வோம் — வீழில் முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்' என்ற பாரதியாரின் பொன் மொழிப்படி, தேவையுணர்ந்து ஒரு சகோதரத்துவமான புரிந்துணர்வின் அடிப்படையில், எம்முடைய இலட்சியத்தைச் சுமக்க வேண்டிய கடப்பாடுடையவர்கள் என்பதை நாம் புரிந்து கொண்டே ஆகவேண்டும்.

எனவே எம் தேச விடியலின் பூபாள ராகத்திற்குத் தாளம் போட எம்கைகளை தயாராக்கி, அதோ தெரிந்து கொண்டிருக்கும் துருவ நட்சத்திரத்தை நோக்க எம் விழிகளை உயர்த்துவோம்!

O அறிவுக் களஞ்சியம் 1 ஆம் இதழில் 'சிற்பி' எழுதிய கட்டுரைக்கு இன்னொரு பக்கம்:

பந்திக்கு முந்து: -

வீட்டிலே நடைபெறும் விருந்தோம்பல் வைபவங்களில் அன்போடு உபசரணை செய்து விருந்தோம்புங் கருமங்களில் 'முன்னின்று உழை' எனவும்,

படைக்குப் பிந்து: -

படைகளை நடத்தும் தளபதி பின்னுக்கும், படைவீரர்கள் முன்னுக்கும் செல்வார்கள். படைத்தளபதிகளை தெரிவதில் மிகவும் திறமை சாலிகளுக்கே முதலிடம் கிடைக்கும். 'அப்படியான திறமை சாலியாக வா' எனவும் பொருள் கொள்ளலாம்.

— சி. சபாநாதன், சங்கரத்தை.

பெண்கள் சாரணியம்

ஆயத்தமாக இரு ....

சாரண இயக்கத்தின் தந்தையான இவ்விஸ் பேடன் பவுல் பிரபுவின் துணைவியரான லேடி பேடன் பவுலால், கலைவரின் வழியில், பெண்களுக்காக வளர்க்கப்பட்ட உலகளாவிய இயக்கமே பெண்கள் சாரணியமாகும். 117 நாடுகளைச் சேர்ந்த பல இலட்சக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டதாக, பெண்கள் சாரணியம் பரிணமித்துள்ளது. இலங்கையில் 1917 ஆம் ஆண்டு சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது.

சமுதாயத்திற்கு உபயோகமுள்ள, கடமையுணர்வு மிக்க தேசப்பற்று மிக்க மனிதனாகப் பயிற்றுவிக்கும் கல்விசார் இயக்கமே சாரணியம் (Ge'f ng) எனப்படும். சாரணியத்தின் மூலம் பெறும் பயிற்சி, அனுபவம் என்பன நாம் கற்ற கல்விப்படி நமது வாழ்வை மட்டுமன்றி, மற்றவர் வாழ்க்கையையும் அமைத்துக் கொள்ள உதவுகின்றது. சாரணியம் அமைப்பு அரசியல் சார்பற்றது. யாவரையும் சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் நோக்கும் உயரிய நோக்கங் கொண்டது. 'ஆயத்தமாய் இரு' என்னும் குறிக்கோளையும்: பண்பு உடனலம், கைப்பணி, சேவை என்னும் நான்கு இலட்சியங்களையும் கொண்டது. சிறு தோழியாக வீட்டிலுள்ளோருக்கு உதவி செய்தல், சாரணியாக எதற்கும் ஆயத்தமாய் இருத்தல், சிரேஷ்ட சாரணியாக வெளியுலகில் போய் சேவை செய்தல் என்பன சாரணியரின் முக்கிய கடமைகளாகும்.

இன்று உலகில் சாரணியத்தின் வளர்ச்சிக்குக் காரணம் சாரணிகளின் மனத்திண்மையும், விடா முயற்சியும், எவ்வித கஷ்ட நிலைகளையும் இன்முகத்துடன் சமாளிக்கும் ஆற்றலும் எனலாம். ஒவ்வொரு சாரணிய மாணவரும் கல்வி தவிர தான் ஈடுபடும் விளையாட்டுப் போட்டிகள், கட்டுரை கவிதை, பேச்சுப்போட்டிகள் என்பனவற்றில் ஏனையோரிலும் சிறந்து விளங்க சாரணியம் சிறந்த அனுபவத்தையும், அறிவையும், ஆளுமையையும் தருகின்றது. மாணவரைச் சமூகமயமாக்குவது சாரணியமாகும். நாளைய ஆளுமை மிக்க நல்ல பிரஜைகளை உருவாக்கச் சாரணியம் உதவுகின்றது. அது மட்டுமன்றி இன்றைய கால கட்டத்தில் எம் மண்ணில் சாரணிகளின் சேவையும் பொறுப்பும் அளவிடற்கரியது.

— ரேகா

பெண்கள் சாரணியம்
இலங்கையில் தோன்றி
இன்று (1992)
75 ஆண்டுகள்
நிறைவுறுகின்றன.

போட்டிகள்

1 குறுக்கெழுத்துப் போட்டி

இந்த இதழின் 33 ஆம் பக்கத்தில் குறுக்கெழுத்துப் போட்டி – வெளியாகியுள்ளது. இதற்கான விடைகள் யாவும் அறிவுக் களஞ்சியம் 2 ஆவது இதழிலுள்ள சொற்களில் அடங்கும்.
தேர்ந்தெடுக்கப்பட்ட சரியான விடை எழுதியவருக்கு பரிசு ரூ 100/

2. நுண்ணறிவுப் போட்டி

29 ம் பக்கத்திலுள்ள நுண்ணறிவுப் போட்டிக்காண விடைகளை எழுதி ஒரு ரூபா முத்திரையுடன் அனுப்பி வையுங்கள்.
இம் முறை பரிசு ரூபா 366.

3. சொல்லறிவுப் போட்டி 4. கட்புலனறிவுப் போட்டி

25 ஆம் பக்கத்திலுள்ள சொல்லறிவுப் போட்டியும், 19 ஆம் பக்கத்திலுள்ள கட்புலனறிவுப் போட்டியும் இம் முறை புதிதாக வெளிவந்துள்ளன. விடைகளை எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனி பரிசு ரூபா. 100/.

போட்டி விதிகள்

(1) குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடை அறிவுக் களஞ்சியம் இதழில் வந்த அச்சக பிரதியிலேயே எழுதவேண்டு மென்பதில்லை. தனித் தாளில், கட்டளைகளை வரைந்தோ, அல்லது இடமிருந்து வலம், மேலிருந்து கிழ் என்று குறித்த இலக்கங்களைக் குறிப்பிட்டோ விடைகளை எழுதி அனுப்பலாம்,

(2) நுண்ணறிவுப் போட்டி தவிர்ந்த வேறு எந்தப் போட்டிக்கும் முத்திரை அனுப்ப வேண்டியதில்லை.

(3) ஒரே மேலுறையில் எல்லாப் போட்டிக்கான விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு போட்டிக்கான விடையும் தனித் தனித் தாளில் எழுதப்பட்டு, ஒவ்வொரு தாளிலும் உங்கள் பெயர், முகவரிகள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) எல்லாப் போட்டிகளுக்கான விடைகளும் எமக்கு வந்து சேர வேண்டிய கடைசித் திகதி 18 - 9 - 92. அதற்கு முன் கிடைக்கத் தக்கதாக ஆசிரியர், அறிவுக் களஞ்சியம், 226, காங்கேசன் துறைச்சாலை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். வசதியுள்ளவர்கள் நேரிலும் கொண்டு வந்து தரலாம்.

(5) அறிவுக் களஞ்சியத்தில் வெளியிடுவதற்காக அனுப்பும் வேறு விடையங்களை போட்டி விடையங்களுடன் அனுப்பாமல், தனியான உறையில் வைத்து அனுப்புங்கள்.

— ஆசிரியர்

போட்டி முடிவுகள்

நுண்ணறிவுப் போட்டி

(1) 3 பனைமரங்களும் 4 கூழைக்கடாக்களும்.
(2) 10 நிமிடங்கள்.
(3) கழுத்தின் சுற்றளவையும், தோள்பட்டையிலிருந்து கையின் நீளத்தையும் குறிக்கும்.
(4) முதலில் இராமி, கணேசி ஆகிய பெண்கள் படகில் செல்ல வேண்டும். இராமியை அக்கரையில் இறக்கி விட்டுத் திரும்பி வந்து சுப்பியைப் படகில் ஏற்றிச் செல்ல வேண்டும். சுப்பியை அங்கு இறக்கி விட்டுத் திரும்பி வந்து தன் கணவன் இராமனுடன் இக்கரையில் இறங்கி நிற்க வேண்டும். இப்போது படகில் கணேசனும் சுப்பனும் ஏறிச் சென்று அக்கரையில் இறங்கிக் கொண்டு அக்கரையில் நிற்கும் கணேசியையும் சுப்பியையும் படகில் அனுப்ப வேண்டும். அவர்கள் இக்கரைக்கு வந்து இறங்கிக் கொண்டு இக்கரையில் நிற்கும் இராமனையும் இராமியையும் படகில் அனுப்பி வைக்க இராமனை அக்கரையில் இறக்கி விட்டு இராமி திரும்பி வந்து, இக்கரையில் நிற்கும் இரு பெண்களையும் தனித்தனி அழைத்துச் செல்ல வேண்டும்.

இம்முறை 266 வாசகர்கள் நுண்ணறிவுப் போட்டியில் கலந்து கொண்டனர். அவர்களில் 7 பேர் மட்டுமே முற்றிலும் சரியான விடைகளை எழுதியிருந்தனர். பரிசுத் தொகை ரூ12/— , சமனாகப் பங்கிட்டு ஆளுக்கு 30/25 வீதம் வழங்கப்படுகின்றது.

O பரிசு பெறுவோர்:

(1) வ. சுகந்தன், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை;
(2) ச. கோகுலராம், வட்டு இந்துக் கல்லூரி;
(3) தி. சிறீகாயத்திரி, யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை;
(4) கதிர் குலேந்திரன், யா/ இந்துக் கல்லூரி;
(5) தி. வாசுகி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்;
(6) தி. பாலகுமாரன், பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்,.
(7) செ. ஜெகன், புனித சம்பத்தரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

கதைப் போட்டி கதைப் போட்டியில் இருவர் பரிசு பெறுகிறார்கள். இருவருக்கும் பரிசு பகிரப்பட்டு ரூபா 50/- வீதம் கிடைக்கிறது.
1) லோ. சிறீதரன், 132/1, பிறவுண் வீதி, யாழ் 2) செல்வி கு. சுகந்தி 20, தொடர் மாடி, குருநகர், யாழ்.
பாராட்டுப் பெறுவோர்: 1) சோ. பதந்தன் (பதா), இந்துக் கல்லூரி. யாழ். 2) ந. திலகராஜா, கனகரத்தினம் ம. மகாவித்தியாலயம், யாழ்.

கட்டுரைப் போட்டி ரூபா 100/- பரிசு பெறுபவர் பு. திலீப்காந்த், பரியோவான் கல்லூரி, யாழ்.
பாராட்டுப் பெறுவோர்: 1 செல்வி வித்தியரூபா இரத்தினசிங்கம் இந்து மகளிர் கல்லூரி, யாழ். 2) செல்வி சத்தியபாமா கனகசபை, இந்து மகளிர் கல்லூரி, யாழ் 3 பொ. முருகதாஸ், இந்துக் கல்லூரி, யாழ். 4) செல்வி ஜீவரேகா சுப்பிரமணியம், தேவாலய வீதி, சங்கானை. பரிசு பெற்றோருக்கும், பாராட்டுப் பெற்றோருக்கும் எமது வாழ்த்துக்கள்!

(குறுக்கெழுத்துப் போட்டி முடிவு 7 ஆம் பக்கம்)

வணக்கம்

அறிவுக் களஞ்சியத்துக்கு வாசகர்கள்— முக்கியமாக இளைஞர்கள் தரும் வரவேற்பைக் கண்டு மனம் பூரிப்படைகிறது.

பாராட்டுக் கடிதங்கள் குவிந்துள்ளன, சிலர் குறைகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

அறிஞர்கள், தாங்கள் அறிந்த நல்ல கருத்துக்களை வாசகர்களுக்கு எடுத்துத் தருவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்களுக்கும் எனது நன்றி.

'கற்றதனாலாய பயனென் கொல், அதை மற்றோர்க்கும் அளித்து மகிழாக்கால்'? என்று புதுக் குறள் சொல்லத் தோன்றுகிறது.

இந்த இதழில், 9, 90, 900 என்னும் இலக்கங்களின் உச்சரிப்பிலுள்ள குறைபாடுகளைப் பற்றி, ஈழத்தின் இரண்டு சிறந்த தமிழறிஞர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். (இருவருடைய கட்டுரைகளும் ஒரே நேரத்தில் எமக்குக் கிடைத்தது ஒரு அதிசயம்!) தமிழ் மொழியில் அவசியமான திருத்தங்களைச் செய்வோர் இக் கட்டுரைகளை மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

போட்டிகளில் இளைஞர்களுக்குள்ள ஆர்வம் சொல்லுந்தரமன்று.

நுண்ணறிவுப் போட்டியிலும், குறுக்கெழுத்துப் போட்டியிலும் பெருந்தொகையான இளைஞர் பங்கு கொள்கிறார்கள். பரிசு கிடைத்தாலென்ன, கிடைக்காவிட்டாலென்ன, இந்தப் போட்டிகளில் கவனம் செலுத்துவதின் மூலம் அவர்களின் அறிவு வளர்கிறது, என்பதில் ஐயம் இல்லை.

இந்த இதழில் போட்டிகளில் பரிசு பெற்ற கதையும், கட்டுரையும், வெளி வந்துள்ளன. இளைஞர்களின் எழுத்துத் திறமை பாராட்டக் கூடிய அளவில் இருப்பதற்கு இவைகள் நல்ல எடுத்துக் காட்டுகள்.

முக்கியமாகப் பரிசு பெற்ற சிறுகதை மிக உயர்ந்த தரத்திலிருப்பதைக் காண்பீர்கள். எழுத்தாற்றலென்பது, முயற்சியோடு, சிலருக்கு இயல்பாகவும் அமைந்து விடுகிறது. நன்றாக எழுதக் கூடியவர்கள், மேலும் மேலும் எழுதித் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். 'அறிவுக் களஞ்சியம்' ஊக்குவித்த சிலராவது, வருங்காலத்தில் ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களாக விளங்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

— வரதர்

அறிவுக் களஞ்சியம் - 3, யாழ்ப்பாணம், காங்கேசன் துறைச்சாலை 226 ஆம் இலக்கத்திலுள்ள ஆனந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டவர்: தி. ச. வரதராசன் செப்டம்பர் '92.

✤ மாசாய் மக்கள், நொஸ்ரடாமஸ், ஆக்கிடிமிஸ் என்ற கட்டுரைகள் சிறப்பாகவிருந்தன. புதியவற்றைப் புரிந்து கொண்டோம்.

க. ஜீவானந்தன், மட்டுவில் தெற்கு.

✤ அறிவுக்களஞ்சியம் நடாத்தும் போட்டிகள் மாணவராகிய எமக்குப் பெரும் தூண்டுதலைத் தருகின்றன.

— ஜெ. ஜெயசீலன், தாவடி தெற்கு, கொக்குவில்.

✤ அழகான, அளவான, அறிவுக்கு நலமான களஞ்சியமாம் எம்தமக்கு.

— சி. சிவஞானராஜா (ஆசிரியர்) யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்.

✤ யான் கண்ட நூல்களில் அறிவுக்களஞ்சியம் போல வேறொன்று மில்லை.

டி. ஸ்ரீ. பிரசன்னா, யாழ்/ வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்.

(இன்னும் நூற்றுக் கணக்கான வாசகர்கள் அரிய கருத்துக்களை இப் பகுதிக்கு எழுதியனுப்பியுள்ளனர். நன்றி. — ஆசிரியர்)

யாழ் நகரில்—

சோபிதா

- பாடசாலை உபகரணங்கள்
- அலுவலக உபகரணங்கள்
- பாடநூல்கள்

முதலியவற்றை மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்வதில் நவீன முன்னோடிகள்.

—இன்றே விஜயம் செய்யுங்கள்—

சோபிதா புத்தகசாலை

363, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம்.

உங்கள் பார்வைக்கு உகந்த

கண்ணாடிகளை

தெரிவு செய்யவும்

பற்களை

அழகாக, உறுதியுடன் கட்டிக் கொள்ளவும்

நாட வேண்டிய இடம்

பி. ஐ. பர்னாண்டோ

542, ஆஸ்பத்திரி வீதி

(யாழ் அரசினர் வைத்தியசாலை முன்பாக)

யாழ்ப்பாணம்